# தி. மு. கழகம்தான் உண்மையான ஆஸ்திகக் கட்சியாம்


Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★★

ஈழநாடு
சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 246
தேசிய தினசரி

ஈழநாடு
சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் புரட்டாதி 30 ஷஃபான் 4 வியாழக்கிழமை (16-10-69)


## கருணாநிதி சொல்கிறார்



சென்னை, அக் 15

திராவிட முன்னேற்றக் கழகம்தான் உண்மையான ஆஸ்திகக் கட்சி என்று தமிழக முதலமைச்சர் திரு மு. கருணாநிதி கூறினார்.

மைலாப்பூர் கபாலீசுவரக் கோவிலிலுள்ள பெரியகுளத்தை சீரணிப்படையினர் இன்று தூர் எடுத்து சுத்திகரிப்பதில் ஈடுபட்டபோது அந்தப்பணியை திரு. கருணாநிதி ஆரம்பித்துவைத்தார். அப்பொழுது பேசுகையிலேயேமேற்கண்ட கருத்தை அளர் வெளியிட்டார்.

ஏழை எளியவர்களுக்கு உதவுவதுதான் ஆஸ்திகம் அந்த வகையில் திராவிட முன்னேற்றக் கழகம்தான் உண்மையான ஆஸ்திகக் கட்சி என்றார் திரு. கருணாநிதி.

இந்த நிகழ்ச்சியில் முரசொலிமாறன் எம். பி பேசுகையில் மக்கள் தமது அன்றாட வேலைகளைச் செய்கையில் ஒரு சிலமணிநேரத்தை பொதுப்பணிக்காக செலவழிப்பதுதான் சீரணிப்படையாகும் என்றார்.

திரு அரங்கண்ணல்பேசுகையில் பொதுப்பணிகளில் இறங்கும்போது பலரும் பலதையும் சொல்வார்கள். அதைப்பற்றியெல்லாம் கவலைப்படக்கூடாது என்றார்.

மற்றும் பலர் பேசினர்கள்.

## 2000 மாணவர்கள் தோற்றுகின்றனர்

யாழ்ப்பாணம், வியா.

அடுத்த ஏப்ரலில் நடைபெறும் ஜி. ஸி, ஈ. (உயர்தர) வகுப்பு பரீட்சையில் வடபகுதியிலிருந்து சுமார் இரண்டாயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் தோற்றவிருக்கின்றார்கள்.

இதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 8-ம் திகதி பரீட்சை இலாகாவுக்கு ஒவ்வொரு கல்லூரி அதிபர்களாலும் அனுப்பிவைக்கப்பட்டது.

சுமார் 5000 க்கும் அதிகமான மாணவர்கள் இதற்கான தேர்வுப்பரீட்சைக்குத் தோற்றியபோதும் சுமார் 2000மாணவர்களேதோற்ற அனுமதிக்கப் பட்டுள்ளதாக கல்வி இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (கா. நி.)

# யாழ். மறியல்சாலைக்குள் கைகலப்பு; கைதி ஒருவர் கொல்லப்பட்டார்

## குன்றக்குடி அடிகளாருக்கு தமிழர் மகாசபை நன்றி

யாழ்ப்பாணம், புதன்

தமிழக மேல் சட்டசபை உறுப்பினர் தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்கு அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை தன் மனப்பூர்வமாக நன்றியைதெரிவிக்கிறது.

இலங்கைக்கு அவர் விஜயம்செய்து தமிழ்மக்கள் மத்தியில் நிலவிவரும் தீண்டாமையை அகற்ற சென்றவிடமெல்லாம் பிரச்சாரம் செய்து குறிப்பிடக்கூடிய அளவு மனமாற்றத்துக்கு குன்றக்குடி அடிகளார் வித்திட்டுச்சென்றமைக்கு சிறுபான்மைத் தமிழர் மகாசபை அவருக்கு நன்றி தெரிவித்தது.

சிறுபான்மைத் தமிழர் சார்பில் திரு. ரி. ராஜலிங்கத்தை செனட்சபையில் நியமிக்குமாறு பிரதமரை அகிலஇலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை கோரியுள்ளது.

அகிலஇலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் காரியக்கமிட்டி கூட்டத்தில் இத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திரு. ராஜலிங்கத்தை செனட்டராக தெரிவுசெய்வதற்கு சகல தமிழ்க்கட்சித் தலைவர்களையும் ஆதரவு வழங்குமாறு கோரும் தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது

உடுப்பிட்டி நாவலர் சனசமூகநிலையம் திரு. ராஜலிங்கத்தை செனட்டராக நியமிக்கும்படி அரசாங்கத்தையும், எதிர்க்கட்சியையும் தமிழ்க்கட்சித் தலைவர்களையும் கோரியுள்ளது.

## மற்றொரு கைதி பாதுகாப்பில்; பொலிஸார் புலன்விசாரணை

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் கோட்டை மறியற்சாலைக்குள் இரண்டு கைதிகளுக்கிடையே நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்ட கைகலப்பொன்றில் நீண்ட நாள் கைதி ஒருவர் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினமிரவு நடைபெற்றதாக பொலிசார் தெரிவித்தனர்

யாழ்ப்பாணம் பொலிசாரையும் மறியற்சாலை அதிகாரிகளையும் பெரும் பரபரப்புக்குள்ளாக்கிய இச் சம்பவத்தில் மருதானையைச் சேர்ந்த நோமன் என்ற 40 வயதுக் கைதியே மரணமானவராவார்.

நேற்று முன்தினம் மாலை 5-40 மணியளவில் மறியற்சாலைக்குள் மரணமானவருக்கும் மற்றொரு கைதிக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் அதைத் தொடர்ந்து கைகலப்பு ஏற்பட்டதாகவும், இக்கைகலப்பில் நோமன் மண்டையில் படுகாயமடைந்ததாகவும் கூறப்படுகின்றது.

நோமன் நேற்று முன்தினமிரவு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும், அனுமதிக்கப்படும்போதே அவர் மரணமாகிவிட்டதாக அறிவிக்கப்பட்டதாகவும் ஆஸ்பத்திரி பொலிசார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன் திரு. தர்மதாசா டி சில்வாவும், தலைமைக்காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். மாணிக்கமும் இதுசம்பந்தமான விசாரணைகளை நடத்தினர்கள்.

நோமனைத் தாக்கியதாகச் சொல்லப்பட்ட மற்றக் கைதியான மருதானையைச் சேர்ந்த ஏ. ஏ. சுமணதாசா (30 வயது) மறியற்சாலையில் பாதுகாப்பில் வைக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் குற்றத் தடுப்பு பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஜெயசூரியா நேற்று மாலை நடைபெற்ற மாஜிஸ்டிரேட் விசாரணைக்குச் சாட்சிகளை ஆஜர் செய்திருந்தார்.

மரணமான நோமனின் சடலம் உறவினர் வருகைக்காக யாழ். ஆஸ்பத்திரி கலாச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (கா. நி.

## நியூஸிலாந்து 181 ரன்கள்

ஹைதராபாத், அக். 15

இந்தியாவுக்கும் நியூஸிலாந்துக்குமிடையிலான கிரிக்கட் ஆட்டத்தின் இறுதி டெஸ்ட் இன்றுகாலை ஹைதராபாத்தில் ஆரம்பமாயிற்று.

நியூஸிலாந்து கோஷ்டி முதலில் துடுப்பெடுத்தாடியது. இன்று ஆட்டமுடிவில் நியூஸிலாந்து 181 விக்கெட்டுகளை இழந்து 181 ரன்களை எடுத்தது.

## நம்பூதிரிபாட் திரும்பினர்

திருவனந்தபுரம், அக். 15

கிழக்கு ஜெர்மனியில் சிகிச்சைபெற்றுவந்த கேரள முதன்மந்திரி திரு. நம்பூதிரிபாட் நேற்று முன்தினம் கேரளா திரும்பியுள்ளார். கூட்டணி மந்திரிசபையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை தீர்க்க அவர் ஆலோசனை நடத்துவார்.

## தந்தையின் தற்கொலைக்கு இதுதான் காரணம்

யாழ்ப்பாணம், வியா.

மகளின் யபூப்புநீராட் சடங்கு வைபவத்துக்குத் தந்தைக்குச்சொல்லவில்லையாம் இதனால் மனமுடைந்ததாகக் கூறப்படும் தந்தை நச்சுத் திரவகம் அருந்தி மரணமானார்.

இந்தப் பரிதாப சம்பவம் நேற்றுக் காலை திருநெல்வேலிப் பகுதியில் நடைபெற்றது.

கல்வியங்காடுச் சந்தைக்குள் வைத்து மரணமான பொன்னுத்துரை (என்பவர் (48 வயது) நச்சுத் திராவகம் அருந்தியதாகவும் நேற்றுக்காலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமானதாகவும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் மரணவிசாரணை நடத்தினர், (கா. நி)

## ‘அமைச்சரின் உறுதி மீறப்படுகிறது’

பருத்தித்துறை, திங்கள்

“யாழ்ப்பாணம் கீழைத் தேச மொழிகளின் சங்கம் நடாத்தும் இறுதிப் பரீட்சையில் தேறி பண்டித பட்டதாரிகளெனப் பட்டம் பெறுபவர்கள் பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்குச் சமமானவர்களெனக்கருதப்படுவதுடன், அவர்களும் அதி

அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றிற் குறிப்பிட்டுள்ளது

கடந்தவாரம் 2-ம் தர அதிபர் பதவிக்கு விண்ணப்பித்த தமிழ்ப் பண்டிதர் பலரது மனுக்களை நேர்முகப் பரீட்சை நடாத்தும் குழுவொன்று ஏற்றுக்

## “நாடெங்கும் மதுவிலக்கு

## 55

## தீவுப்பகுதி படகுசேவையை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தது.

சிறுபான்மைத் தமிழர் சார்பில் திரு. ரி. ராஜ

தையும், எதிர்க்கட்சியையும் தமிழ்க்கட்சித் தலைவர்களையும் கோரியுள்ளது.

நேற்று முன்தினம் மாலை 5-40 மணியளவில் மறியற்சாலைக்குள் மரணமானவருக்

திரு. தர்மதாசா டி சில்வாவும், தலைமைக்காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர்

காக யாழ். ஆஸ்பத்திரி கலாச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (கா. நி.

ஏற்பட்டுள்ள நெருக்கடியை தீர்க்க அவர் ஆலோசனை நடத்துவார்.

நடாத்தும் இறுதிப் பரீட்சை யில் தேறி பண்டித பட்டதாரிகளெனப் பட்டம் பெறுபவர்கள் பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்குச் சமமானவர்களெனக்கருதப்படுவதுடன், அவர்களும் அதிபர் பதிவிகளுக்கும் விசேட பதவிகளுக்கும் விண்ணப்பிக்கும் தகுதி வாய்ந்தவர்களாகக் கணிக்கப்படுவரென கல்வி அமைச்சர் திரு ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை. உடுப்பிட்டி எம். பி திரு. மு. சிவசிதம்பரத்தின் வினவொன்றுக்குப் பதிலளித்த பின்னர் நேர்முகப் பரீட்சை நடத்தும் ஒரு குழு பண்டிதர்மார் பட்டதாரிகளுக்கான சம்பளம் பெற்றுல் மட்டுமே அவர்களுடைய மனுக்கள் கவனிக்கப்படுமென்று கூறியிருப்பது பாராளுமன்றத்தையும், அமைச்சரையும் அவமானப்படுத்துவதாகும்.''

இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்ப் பண்டித பட்டதாரிகள் சங்கம் கல்வி

கடந்த வாரம் 2-ம் தர அதிபர் பதவிக்கு விண்ணப்பித்த தமிழ்ப் பண்டிதர் பலரது மனுக்களை நேர்முகப் பரீட்சை நடாத்தும் குழுவொன்று ஏற்றுக் கொள்ள மறுத்ததன் எதிரொலியே இம்மகஜராகும்.

ஆட்சிமன்ற 'கன்சாட்' அறிக்கையில் மேற்கோள் காட்டியுள்ள இம்மகஜர் பட்டதாரிச் சம்பளம் பெறும் சிங்கள பிராசீனப் பண்டிதர்களுக்கு 2-ம் தர அதிபர் பதவிகள் வழங்கப்படலாமெனின் தமிழ்ப் பண்டிதர்களுக்கும் அதே வித் பதவிகள் வழங்குவதில் தயக்கமேன் என வினவியுள்ளது.

இதே விடயம் பற்றி யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கல்வி அமைச்சருக்கு காரசாரமான கடிதம் ஒன்று எழுதியுள்ளதாக பண்டிதர் சங்கச் செயலாளர் திரு. வைரவனுர் கூறினுர்.

# "நாடெங்கும் மதுவிலக்கு அமுல் செய்ய வேண்டும்"

யாழ்ப்பாணம், வியாழன்

''காந்தி நூற்றுண்டுவிழா இலங்கையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்ட இவ்வேளையில் காந்திஜியின் இலட்சியங்களில் ஒன்றுன மதுவிலக்கை நாடெங்கும் அமுல் நடத்த வேண்டும்''

இவ்வாறு கூறும் தீர்மானம் கைதடி கிழக்கு இந்து வாலிபர் சங்கத்தால்கொண்டாடப்பட்ட காந்தி விழாவில் நிறைவேற்றப்பட்டது. பின்வரும் தீர்மானமும் இங்கு நிறைவேற்றப்பட்டது:

சிதம்பரத்துக்கு நன்கொடையாகவழங்கப்பட்ட காணிகளின் வருமானம் அங்கு அனுப்பப்படுகின்றதா என்பதை ஆராய்ந்து அப்படி அனுப்பப்படாது இருந்தால் குறிப்பிட்ட காணிகளின் நிர்வாகத்தை இந்துசமயப் பணிக்குச்செலவிடும்படி இந்துமா மன்றத்தைக் கேட்டுக் கொள்வது

# 55 அடி உயரமுள்ள புத்தர் சிலை

கோட்டை, புதன்

புத்தளத்துக்கருகில் மிக உயரமான புத்தர் சிலையொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சுமார் 55 அடிக்கு மேல் உயரமுள்ள இப்புத்தர் சிலை தென்கிழக்காசியாவிலேயே மிக உயரமான சிலையென்று கருதப்படுகின்றது. இப்பகுதியில் பல சிறிய புத்தர் சிலைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவைகளில் பல வேட்டையாடுபவர்களால் சேதப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. இப்பகுதியைப் பாதுகாப்புக்குரிய பகுதியென அறிவிப்பதற்கு தொல்பொருள் ஆராய்ச்சிப் பகுதியினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

# தீவுப்பகுதி படகுசேவையை பொதுமராமத்து இலாகா பொறுப் பேற்கும்

யாழ்ப்பாணம், வியா.

தீவுப்பகுதி படகு சேவையை பொதும்ராமத்து இலாகா பொறுப் பேற்கவிருப்பதாக அறியப்படுகிறது. வடமாகாண அரசாங்க அதிபர் போக்குவரத்து அமைச்சரின் கோரிக்கையைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

தீவுப்பகுதி படகு சேவையை நடாத்திவரும் தீவுப்பகுதி மோட்டார் வள்ள ஐக்கியசங்கம் குலைக்கப்பட்டு சீர்குலைந்தநிலையில் இயங்கிவருவதாகவும் இதனுல் இப்பகுதி மக்கள் போக்குவரத்தில் பெரிதும் கஷ்டமடைந்துவருவதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளாராம்.

## லண்டன் பயணமானுர்

யாழ்ப்பாணம், வியாழன்

நாரந்தனையைச் சேர்ந்த ஆ.தேவரட்ணம் நெசவு, நூல் முதலிய துறைகளில் தொழில் நுட்பப்பயிற்சி பெறுவதற்காக லண்டன் பயணமானுர். இளைப்பாறிய ஆசிரியர் க.ஆசீர்வாதம் தம்பதிகளின் புதல்வரான இவர் அர்ச்.சம்பத்திரிசியார்கல்லூரியின பழைய மாணவராவார். 4 வருடம் இவர் லண்டனில் பயிற்சி பெறுவார்.

(கா. நி)

## புனிதஜேம்ஸ் பாடசாலைதரம் குறைப்பு:

# அதிர்ச்சிதரும் திட்டம்

## யாழ். மாநகரசபை கண்டனம்

யாழ்ப்பாணம், வியா

யாழ். நகரில் உள்ள பெரிய பாடசாலைகளில் இடம்கிடைக்காது பிள்ளைகள் அவதிப்படும் நிலையில், யாழ். நகரில் கூடிய சனத்தொகையை உடைய பகுதியில் இருக்கும் ஒரேஒரு பெரிய கல்லூரியான யாழ்ப்பாணம் புனித ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையை எதிர்வரும் 1970-ம் வருடத்துடன் 7ம் வகுப்பு வரை படிப்பிக்கும் பாடசாலையாகத் தரம் குறைக்கத் திட்டமிட்டிருக்கும் புதிய கல்வித்திட்டத்தை கவலையோடும் அதிர்ச்சியோடும் கருதும் இச்சபை, இப்பாடசாலை இன்று இருப்பதுபோல் 10ம் வகுப்புவரையும் தொடர்ந்து கல்விபுகட்ட அனுமதிக்கப்படவேண்டுமென்றும், விரைவில் அதை ஒரு மகாவித்தியாலயமாக மாற்றவேண்டுமென்றும் கல்வி அமைச்சரை இச்சபை கேட்டுக்கொள்கிறது.

யாழ்ப்பாண மாநகரசபையின் பொதுக்கூட்டம், நேற்று மேயர் எஸ். நாகராசா தலைமையில் நடைபெற்றபோது மேற்கண்டதீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

திரு. எம். எஸ். பேரின்பநாயகம் கொண்டுவந்த இத்தீர்மானத்தின்பிரதி ஒன்றை இப்பகுதிமக்களின் கல்விஅபிவிருத்தியில் அரும்சேவையாற்றிவரும் இப்பாடசாலையின் சேவை தொடர்ந்து கிடைக்க ஆவன செய்யும் பொருட்டு யாழ்ப்பாணம் எம். பிக்கு அனுப்புவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

மதகுகள் அமைப்பதற்கு அவசியம் தேவைப்படும் ஹியூம் குழாய்களை இரத்மலானையில் இருந்து தருவிப்பதில் ஏற்படும் தாமதத்தால் மாநகரமராமத்து வேலைகளில் ஏற்படும் அனுவசிய காலதாமதத்தை தவிர்க்குமுகமாக, மின்சார கம்பங்களையும் திணைக்களம் மூலம் தயாரிப்பதுபோன்று ஹியூம் குழாய்களையும் திணைக்களம் மூலம் தயாரிப்பதென்றும், தீர்மானத்தைச் செயல்படுத்துவதற்கு வேண்டும் பண ஏற்பாடுகளை எதிர்வரும் உபவரவுசெலவு திட்டத்தில் அல்லது 1970ம் வருட வரவுசெலவுத்திட்டத்தில் செய்வதென்றும் இச்சபை தீர்மானிக்கிறது.

திரு. எம். எஸ். பேரின்பநாயகம் கொண்டுவந்த மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

டாக்டர் ஞ. எல். ஏபிரகாம் கொண்டுவந்த கீழ்க்காணும் தீர்மானம் நிறைவேறியது: யாழ்ப்பாணக் குடாநாட்டில் அதிக மீன்களைப் பிடிக்கும் இடங்களுள் ஒன்றுன குருநகர் கடற்கரை ஓரத்தில் ஓர் பாதுகாப்பான துறைமுகத்தை கூடிய கெதியில் அமைக்கும்படி மீன்பிடிஇலாகா, மீன்பிடிக்கூட்டுத்தாபனம். மீன்பிடி அமைச்சர் ஆகியோரை இச்சபை கேட்டுக்கொள்கிறது.

## தரம் உயரும்

கோட்டை, புதன்

நாட்டிலுள்ள 50 உப தபால்நிலையங்கள் விரைவில் தரம் உயர்த்தப்படவேண்டுமென தபால் தந்திப்பகுதி அமைச்சர் திரு. மொண்டேகு ஜயவிக்ரம தீர்மானித்துள்ளார்.

கிராமபுறங்களில் தபால் தந்திச்சேவையை முன்னேற்றுவதற்காகவே மேற்படி நடவடிக்கையை தபாலமைச்சர் மேற்கொள்ளவிருக்கிருர்.

## வியட்னும் போருக்கு எதிராக

# அமெரிக்காவில் நேற்று நடந்த மாபெரும் ஆர்ப்பாட்டம்

வாஷிங்டன், அக் 14

லட்சோபலட்சம் அமெரிக்கமக்கள்வியட்னும்போருக்கு எதிராகஇன்றுபெரிய ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடாத்தினர். அமெரிக்க சரித்திரத்திலேயே முதல்தடவையாக பொதுமக்கள் ஒன்று திரண்டு தமது எதிர்ப்பை காட்டியிருக்கிருர்கள் எனச்செய்திகள் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்க தலைநகரில் லட்சக்கணக்கான மக்கள் மறைந்த நீக்ரோ தலைவர் டாக்டர் மார்ட்டின்லூதர கிங்கின் துணைவியார் திருமதி கிங் தலைமையில் வெள்ளை மாளிகைநோக்கி அணிவகுத்துச் சென்றன.

அரசாங்க கட்டடங்கள், தொழிற்சாலைகள், வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றில் அரைக்கம்பத்தில் கொடிகள் பறந்து கொண்டிருந்தன.

பல இடங்களிலும் பல் கலைக்கழகங்கள் மூடப்பட்டு மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களில் கலந்து கொண்டிருந்தனர்.

அமெரிக்காவின் ஆயிரம் நகரங்களுக்கு இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் பரவியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. வடவியட்னுமின் தலைவர் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் குறித்து அமெரிக்க மக்களுக்கு பாராட்டும், நன்றியும் தெரிவிக்கிருர்.

## பயிற்சி

மானிப்பாய், புதன்

யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலை கூட்டுறவு நினைவுறுத்தற் பயிற்சி நெறியினை இம்மாதம் 17, 18-ம் திகதிகளில் நடாத்தவிருக்கின்றது.

கூட்டுறவு பதில் ஆக்க ஆணையாளர்திரு. ரி. பி. இராஜகு இப்பயிற்சி நெறியினை ஆரம்பித்துவைப்பார் மேற்படி கலாசாலை அதிபர் திரு. க. பரமோதயன், வ. ஐ. மே. சபைத்தலைவர் திரு. இ, இராசரத்தினம் ஆகியோர் உரைநிகழ்த்துவார்கள்,

## எம்.ஜி.ஆர் தொடக்கி வைத்தார்

தாம்பரம், அக்.15

ஆலந்தூரில் ரூ. 50 லட்சம் செலவில் அமைக்கப்படும் குடி நீர்த்திட்டத்தை நடிகர் எம்.ஜி.இராமச்சந்திரன் தொடக்கி வைத்தார்.

# யாழ். நகரில் பெற்றேலிம் கூட்டுதாபன ஊழியர் கைகலப்பு

## இருவரும் ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாண்ம், வியாழன்

வேலைநிறுத்த நாட்களின் போது வேலைக்குச் சென்ற ஊழியர் ஒருவரை மற்றொரு ஊழியர் தாக்கினுராம் இக்கைகலப்பில் காயமடைந்த இரண்டு ஊழியர்களும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சமபவம யாழ்ப்பாணம் பெற்றேலியம் கூட்டுஸ்தாபன ஊழியர்கள் விடுதியில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

ஆர். ஜே. சிரியால, டி. கே. டி. திலகதொன் என்ற இரண்டு பெற்றேலியம் கூட்டுஸ்தாபன ஊழியர்களுமே இக்கைகலப்பில் காயமடைந்தவர்களாவர்.

வேலைநிறுத்த நாட்களின் போது சிரிபால வேலைக்குப் போனதாகவும், இதனை திலகதொன் கண்டித்ததாகவும் இதனைத் தொடர்ந்தே இக்கைகலப்பு ஏற்பட்டதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து நேற்றுக் காலை முதல் யாழ்ப்பாணம் பெற்றேலியம் கூட்டுத்தாபன வாசலில் ஆயுதம் தாங்கிய பொலிசார் காவல்புரிந்து வருகின்றனர். இச்சம்பவம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(கா. நி.)

## மந்திரிசபையில் மாற்றம்?

புதுடில்லி, அக் 15

மத்திய விவசாய உணவு ஸ்டேட் மந்திரி திரு. எம். எஸ். குருபாத சுவாமியை ராஜினுமாசெய்யும்படி பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தி கேட்டுக்கொண்டுள்ளார்.

மந்திரிசபையை மாற்றி அமைப்பதற்கான முதல் நடவடிக்கையாகவே இது நடைபெற்றுள்ளதாம். சில கனிஷ்டமந்திரிகளுக்கும் இவ்விதம் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

## இடமாற்றத்தை ஆட்சேபித்து

# சத்தியாக்கிரகம் செய்த அதிகாரிகள் றிமாண்டில்

நல்லூர், புதன்

இடமாற்றத்தை ஆட்சேபித்துஉயர் அதிகாரி இருவர் அலுவலகத்திலேயே சத்தியாக்கிரகம் செய்தனர். மாங்குளம் காணி அபிவிருத்தி இலாகா அலுவலகத்தைச் சேர்ந்த காணி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இருவர் தம்மை அக்கராயனுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து நேற்று சத்தியாக்கிரகம் செய்தனர்

பிரேமதாசா, விமலதாசா ஆகிய இருவருமே இப்படி தமது எதிர்ப்பைக் காட்டினர் பொலிஸாருக்கு இந்தச் சம்பவம் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, வவுனியாப் பொலிசார் இவ்விருவரையும் கைது செய்து றிமாண்டில்வைத்துள்ளனர்.

## உண்ணுவிரதமிருக்கும்

## பெருமான் உடல்நிலை மோசம்

அமிர்தசரஸ், அக். 15

சண்டிகார் நகரத்தை பஞ்சாப்புடன்சேர்க்கவேண்டும் என்று கோரி தொடர்ந்து 61 நாட்களாக உண்ணுவிரதம் இருந்துவரும் தர்ஸன்சிங் பெருமானின் உடல்நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப்-அரியானு ஆகிய 2 மாநிலங்களுக்கும்பொதுத் தலை நகரமான சண்டிகார் யாருக்குச் சொந்தம் என்ற பிரச்னை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது, சண்டிகார் நகரத்தையும் அதன்சுற்றுப்புறங்களையும் பஞ்சாப் மாநிலத்தின் சேர்க்க வேண்டும் என்று கோரி கடந்தஆகஸ்ட் மாதம்14-ம் திகதி முதல் பஞ்சாப்பைச் சேர்ந்த தர்ஸன் சிங் பெருமான் என்பவர் உண்ணுவிரதம் இருந்து வருகிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### தேவை

கணக்காளர் / குமாஸ்தா, 22 வயதிற்குட்பட, ஆங்கில தட்டெழுத்து தெரிய வேண்டும். விண்ணப்பிக்கவும் ராமகிருஷ்ணாஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1477

ட்ரைவர்:

Heavy Car லைசென்ஸ் உடையவர் தேவை. தொடர்பு கொள்க: வின்ஸர் தியேட்டர், யாழ்ப்பாணம். 1480

### விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள 40 பேஸ் அக்கோடியன் விற்பனைக்கு உண்டு. சி. ஆனந்தராசா, ஆசிரியர், அமெரிக்கன் மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி 1475


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**வியாழன் 16—10—69**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன்ட் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் 49 மீ

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் 61 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 வளரும்பயிர், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 கிராமியப்பாடல்கள், 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்னாடக இசை, 7-35 தொழிலாளர் நிகழ்ச்சி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 இசைச்சித்திரம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.


### ஸ்ரீ காலிங்கா

இணுவில்

தினசரி .6-30, 9-30

சனி, ஞாயிறு, போயா 2-30 மணி



## முல்லைத்தீவுப் பட்டணசபை கேள்வி விளம்பரம்

1969-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 22-ந் திகதி காலை 10-00 மணி வரை முல்லைத்தீவுப் பட்டணசபைத் தலைவரால் பின்வரும் வேலைக்கு சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. சேரி ஒழிப்புத் திட்ட வீடுகள் அமைத்தல்.

2 பள்ளிவாசல் வீதிக்கு தார் போடுதல்.

மற்றும் விபரங்களை முல்லைத்தீவுப் பட்டணசபைக் காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

ம. சூ. வஸ்தியாம்பிள்ளை,
தலைவர்,
பட்டணசபை,
முல்லைத்தீவு.

பட்டணசபைக்
காரியாலயம்,
முல்லைத்தீவு,
13 10-69. 1791

### தேவை

ஊர்காவற்றுறைப் பட்டினசபைக்கு இறு வரி அறவிடுபவர்கள் தேவை. விண்ணப்பகாரர்கள் கல்வி அறிவு உடையவர்களாகவும், நன்னடத்தை உடையவர்களாகவும் ரொக்கப் பிணையாக ரூபா 1500/- கட்டக் கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும். மேற்காட்டிய தகுதி உடையவர்கள் கீழ்க் காட்டப்பட்டுள்ள அலுவலகத்திற்கு 25-10-69க்கு முன் விண்ணப்பிக்கவும். விண்ணப்பகாரர் இவ்வேலை சம்பந்தமான முழு விபரங்களையும் அலுவலக நேரங்களில் நேரிலே அறிந்துகொள்ளலாம்.

எஸ். இம்மானுவேல்,
தலைவர்,
பட்டினசபை,
ஊர்காவற்றுறை.

பட்டினசபைக்
காரியாலயம்,
ஊர்காவற்றுறை,
14-10-69. 1792

### அடைவு நகை ஏலவிற்பனவு

யாழ்ப்பாணம் 222, காங்கேசன்துறை வீதி, திரு. கந்தையா பரமு அவர்களிடம் 30-6-66 தொடக்கம் 30-6-67 வரை வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவை 30-10-69 வியாழக்கிழமை காலை 10 மணி தொடக்கம் அதேயிடத்தில் வைத்து பிரசித்தஏலத்தில்


## புதிய நிர்வாகிகள்

காலி, புதன்

காலி செய்கு யூஸுப் ஸாஹிப் தர்காயூனின் வருடாந்தக் கூட்டம் அல்ஹாஜ் ஏ. எச். எம். ஹுஸைன் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்புவருட உத்தியோகஸ்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: அல்ஹாஜ் ஏ எச் எம் இஸ்மாயில், தலைவர்: ஜனுப் ஏ எச் எம் ஹுஸைன், உபதலைவர்: ஜனுப் ஏ ஸி எட் இஸ்மாயீல் (எம் எம் ஸி), இணைச் செயலாளர்: ஜனுப்கள் எம் ஐ எம் அலவி, ஏ எம் நிஸாம், தனாதிகாரி; ஜனுப் எம் ஏ ஏ ஹமீட்.

ஏ எஸ் எச் ஏ ஹன்னான் தலைமையில் பத்துப்பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரியப்பட்டது.

0 0 0

ஊர்காவற்றுறை, புதன்

தமிழரசுக் கட்சி ஊர்காவற்றுறைக் கிளை அமைப்புக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது:

பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாசத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு கே ஆசைப்பிள்ளை, உபதலைவர்: திரு. ஏ பெர்ணன்டோ, காரியதரிசி: திரு. இ. சோமசுந்தரம், உப காரியதரிசி: திரு. ஏ பத்திநாதன், தனாதிகாரி: திரு. ரி. பிரான்சிஸ்.

0 0 0

ஊர்காவற்றுறைப் புனித சூசையப்பர் இளைஞர் மன்றத்தின் வருடாந்தப் பொதுகூட்டம் திரு. எம். ஏ லூயீஸ் தலைமையில் நடைபெற்றது. நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவா: திரு பி. புனிதராசா, உபதலைவர்: திரு பி யெறோம், செயலாளர்: திரு எஸ் யோர்ச் சௌந்தரன், துணைச் செயலாளர் திரு. ரீ கிளீற்றஸ், பொருளாளர்: திரு. எம் பெனடிக்ற், திரு. ரீ ஞானசேகரன் தலைமையில் எம் ஏ லூயிஸ், எஸ் எம் மனோகரன், ஜீ அந்தோனிசாமி, எஸ் ஜே ஜோசப் ஆகியோர் நிர்வாக சபை அங்கத்தினராகத் தெரியப்பட்டனர்.

—

## பல்கலைக்கழகம் மௌனம்

பருத்தித்துறை, புதன்

இலங்கைப் பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சையில் தேறியவர்களென அறிவிக்கப்பட்டு, மனுப்பத்திரங்கள் கோரிய சில மாணவருக்கு பல்கலைக்கழகம் எவ்

## இல்ல விளையாட்டுப் போட்டி

புத்தூர் புதன்

புத்தகலட்டி விஷ்ணு வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி கோப்பாய் எம். பி திரு. சி. கதிரவேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

வள்ளுவர் இல்லம் முதலாமிடத்தையும் பாரதி கம்பன் இல்லங்கள் முறையே இரண்டாம் மூன்றாமிடங்களையும் பெற்றன.

ஆண்கள் மேற்பிரிவு: செல்வன் மகாலிங்கம் மத்திய பிரிவில் செல்வன்: கோ. மகாலிங்கம், கீழ்ப்பிரிவில் செல்வன் வே. யோகராசாவும், பெண்கள் மத்திய பிரிவில் செல்வி சி. திவ்விய மலரும் சாம்பியன் கிண்ணங்களைப் பெற்றுக்கொண்டனர்.

வெற்றி பெற்ற இல்லத்துக்கு திரு. மு செல்லத்துரையால் அன்பளிக்கப்பட்ட வெற்றிக் கேடயம் வழங்கப்பட்டது. வெற்றியீட்டிய வீரர்களுக்கு திருமதி கதிரவேலுப்பிள்ளை பரிசில்கள் வழங்கினர்.

## தொல்புரம் வெற்றி

சுழிபுரம், புதன்

தொல்புரம் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கோஷ்டிக்கும். சங்கானை அண்ணா விளையாட்டுக் கழகக் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் தொல்புரம் மத்திய சன சமூக நிலையத்தினர் வெற்றிபெற்றனர். முதல் இரண்டு ஆட்டங்களிலும் மத்திய சன சமூக நிலையம் 7: 14 - 12: 14 என்ற புள்ளிகளைப்பெற்றது. போட்டிக்கு திரு. இ. சிவராசா மத்தியஸ்தராக கடமையாற்றினர்.

— —

## இமையாணன் வெற்றி

பருத்தித்துறை, புதன்

சுடரொளி விளையாட்டுக் கழக கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இமையாணன் கோஷ்டியும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் கோஷ்டியும் கலந்துகொண்ட போது இமையாணன் கோஷ்டி 2-1 ஆட்டங்களால் வெற்றியீட்டியது.

திரு. வி. நடராசா மத்தியஸ்தரா க் கடமையாற்றினார்.

—

## பொலிசை இராணுவம் ...

## கோப்பாய் ஆசிரியகலாசாலை பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், வியா.

கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலையிலிருந்து 1967 — 68ம்ஆண்டு ஆசிரிய பயிற்சிப் பரீட்சைக்கு தோற்றிய 38 ஆசிரிய மாணவிகளில் 35 பேர் சித்தியடைந்துள்ளனர். மூவர் நூன சித்தியடைந்துள்ளனர். பெயர் விபரம் வருமாறு:

நவரத்தினம் லூத்துமேரி, சேனாதிராசா புவனேஸ்வரி, விஸ்வலிங்கம் அம்பாலிகை, இராசதுரை அன்னபூரணம், சவிரி சிசிலியா பீற்றர் ஜெசின், செந்திவேற்பிள்ளை கமலேஸ்வரி, தெய்வேந்திரம் கண்மணி, கந்தசாமி கருணேஸ்வரி, அம்பிகைபாகன் கோமதி, தியாகராசா குகதேவி, பாலசிங்கம்மகேஸ்வரி, தம்பு மகேஸ்வரி, நேசரத்தினம் மல்லிகாதேவி, சிவப்பிரகாசம் மனோன்மணிதேவி, நீக்கிலாப்பிள்ளை மாகிறேற்றம்மா, யோனாஸ் மேரி றெஜீனா, பொன்னம்பலம் நல்லம்மா, இரத்தினசிங்கம் நல்லம்மா, செபஸ்ரியன் குறூஸ் நிமலமதியம்மா சின்னத்துரை பத்மாவதி சின்னத்துரை பரமேஸ்வரி, சிற்றம்பலம் புனிதவதி, தவராசா யேரி மாகிறேற் புஷ்பராணி, சின்னையா மனோன்மணிருதா, மண்டலேஸ்வரன் இராசமணிக்கம், மாணிக்கவாசகர் சரஸ்வதி, நவரத்தினம் சரோஜினி, இரத்தினம் செல்வரத்தினம் செல்லத்தம்பி செல்லப்பாக்கியம், சின்னத்துரை சிவமணி, சிவஞானசுந்தரம் தங்கேஸ்வரி, ஞானப்பிரகாசம் தெரேசா, சரவணமுத்து திலகராணி, ஜெயமேரி அமலோற்பலம் பிரான்சிஸ் சேவியர்

**நூன சித்தியடைந்துள்ளவர்கள்**

கந்தையா மாகிறெற், சின்னப்பா பராசக்தி, படைவீரசிங்கம் விமலேஸ்வரி.

—

## கம்யூனிஸ்ட் மாநாடு

உடுப்பிட்டி, புதன்

வட பிரதேச கம்யூனிஸ்ட் (மாஸ்கோ) சார்பு கட்சியின் வருடாந்த மகாநாடு எதிர்வரும் 18-ம்திகதி நெல்லியடியில் நடைபெற உள்ளது.

இம் மகாநாட்டில் தென்னிலங்கையிலிருந்து கம்யூனிஸ்ட் கட்சிப்பிரமுகர்கள் கலந்து கொள்வர்.

நெல்லியடி லட்சுமி தியேட்டர் மண்டபத்தில் காலை 9 மணிக்கு மகாநாடு ஆரம்பமாகும். பின்னர் மாலையில் கரணவாய் மூத்த விநாயகர் கோவிலடியிக்

## விசாரணைக்குழு நியமனம்

ஊர்காவற்றுறை, புதன்

சரவணைக் கிராமத்திற்கு தனிக்கிராமசபை அமைப்பது பற்றி விசாரிப்பதற்கு விசாரணைக்குழு ஒன்றை அமைச்சர் நியமித்துள்ளார்.

தனுக்கிராமசபை விஷயமாக மக்களின் கருத்துக்களை மூன்று பிரதிகளில் எழுதி இம்மாதம் 31-ந்திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு விசாரணைக்குழு கேட்டுக்கொண்டுள்ளது.

—

## ஐவருக்கு தலா ரூபா 200 பிணை

மல்லாகம், புதன்

வீடு புகுந்து பொல்லு, இரும்பு சங்கிலி போன்ற ஆயுதங்களால் தாக்கி காங்கேசன்துறை வாசியான சண்முகலிங்கம்என்பவருக்கு காயம் விளைவித்ததாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட வல்வெட்டித்துறை வாசிகள் ஐவர் காங்கேசன்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜேக்கப்பினால் மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

நீதிபதி ஐவரையும் தலா 200 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து மீண்டும் இம்மாதம் 23-ம் திகதி நீதிமன்றம் ஆஜராகுமாறு உத்தரவிட்டுள்ளார். காயமடைந்தவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் பொலிசார் மேலும் விசாரணை செய்கின்றனர்.

## பிரிட்டன் சென்றார்

யாழ்ப்பாணம், வியாழன்

இலங்கை பொறிஇயல் கூட்டுஸ்தாபனத்தின் உதவி நிருமான அத்தியட்சகரான திரு கே. கோபாலகிருஷ்ணன் மெக்கானிக்கல் சிவில் உற்பத்திப் பொறி இயலில் நாலு வருட உயர்கல்வி பெற இங்கிலாந்திலுள்ள போல்டன் பொறிஇயல் கல்லூரிக்குச்சென்றுள்ளார். இவர் நெடுந்தீவு மகாவித்தியாலயம், ஹாட்லி கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி. இலங்கைப் பொறிஇயல் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார்.

## 'தங்கசங்கிலியையும் மோதிரத்தையும் திருடிக்கொண்டு ஓடினர்'

மல்லாகம், புதன்

''எனது இரண்டு, நான்கு வயது வந்த இரு குழந்தைகளை வீட்டில் இருக்கவிட்டு சம்பவதினம் மாலை தோட்டத்திற்குப் போயிருந்தேன் திரும்பி வீடுவந்து வளவுக்குள் போனதும் அறைக்குள் சத்தம்கேட்டது அப்போது அறையுள்ளே சென்று பார்த்தபோது எதிரிகள் மூவரும் டிறங் பெட்டியை எடுத்து வைத்திருந்ததைக் கண்டேன். என்னை எதிரிகள் கண்டதும் ரூபா 540 பெறுமதியான தங்க சங்கிலி, மோதிரத்தையும் திருடிக்கொண்டு என்னை நிலத்தில் தள்ளிவிழுத்திவிட்டு ஓடிவிட்டனர்''

மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் களவு வழக்கு ஒன்றின் விசாரணையின் போது ஈவினையைச் சேர்ந்த மகேஸ்வரி கிட்டினன் என்பவர் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

சுன்னாகம் பொலிசார் செல்வம், கணேசு, சிவசரணம் என்ற மூன்று வாலிபர்களுக்கு எதிராகஇவ்வருடம் செப்ரெம்பர் 1-ம் திகதி ஈவினையைச் சேர்ந்த கே. மகேஸ்வரியின் வீட்டை உடைத்து களவாடியதாக இவ்வழக்கை தாக்கல்செய்துள்ளனர்.

நீதிபதி வழக்கு விசாரணையை அடுத்த மாதம் 3-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் பொலிஸ் தரப்பில் வழக்கை நடத்தினர். எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் ரி. தம்பிரத்தினம் ஆஜரானார்.

## காரில் கடத்தியவருக்கு நன்னடத்தை உத்தரவு

மல்லாகம், புதன்

தனது மனைவியின் சகோதரியான இளம் பெண்ணை காரில் கடத்தி சென்றதாகக் குற்றம் சுமத்தப்பட்ட வாலிபரை மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி இரண்டு வருடகால நன்னடத்தை பாதுகாவலில் செல்ல உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்.

பலாலியைச் சேர்ந்த போனபேர்த் வயது15என்ற இளம் பெண்ணை கடத்தியதாக எஸ் பாக்கியநாதர் என்பவர் மீது இவ்வழக்கில் சுன்னாகம் பொலிசார் குற்றஞ்சாட்டியிருந்தனர் பொலிஸ் தரப்பில் வழக்கறிஞர் எம். உலகநாதன் வழக்கை நடாத்தினர்.

## 42ஆயிரம்மாணவர்கள் விண்ணப்பம்

கோட்டை, புதன்

கொழும்புப்பகுதியிலுள்ள பாடசாலையில் சேருவதற்காக 42,000 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர். இங்குள்ள பாடசாலைகளில் இவர்கள் கல்விகற்க வசதியளிப்பதற்காக அரசாங்கம் கொழும்பு மாவட்டத்திலுள்ள 25 பாடசாலைகளில் புதிய கட்டடங்களை நிறுவ நடவடிக்கைகள்மேற்கொண்டுள்ளது.

இக்கட்டிடங்கள் அநேகமாக அடுத்த தவணைக்குள் பூர்த்தியாகும் எனவும்இந்த 42,000 மாணவர்களில் அநேகருக்கு இடவசதிவழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ நெடுந்தீவு மத்தியைச் சேர்ந்த குமாரசாமி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன்

— —

## சகோதரிக்கு நஷ்டஈடு


மல்லாகம், புதன்

இணுவில் வாசியும் தனது சகோதரியுமான வி. பவானியம்மா என்ற34வயதுபெண்மணியை கடையிலிருந்து வீடு திரும்புகையில் வழியில் வைத்து நிலத்தில் தள்ளி விழுத்தி பல்உடைத்ததாக வி. கருணமூர்த்தி என்ற வாலிபர் மீது சுன்னாகம் பொலிஸார் தொடர்ந்திருந்த வழக்கில்மல்லாகம்நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி காயமடைந்தவருக்கு ரூபா 100 நஷ்டஈடு வழங்க உத்தரவிட்டு தீர்ப்பு வழங்கினர்.

## சர்வதேச மகாநாட்டில் உபசபாநாயகர்

பருத்தித்துறை, புதன்

புதுடில்லியில் இம்மாதம் 27 ம் தேதிநடைபெறவிருக்கும்சர்வதே ச ஆட்சிமன்ற மகாநாட்டில் உடுப்பிட்டி எம். பி யும் உபசபாநாயகருமான திரு. எம். சிவசிதம்பரம் கலந்துகொள்வார்.


கட்டுக் குலையாக  மேனி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி,
9-30 இசைச்சித்திரம்,
10-00 நேயர்கேட்டவை,
10-30 செய்திச்சுருக்கம்.


**ஸ்ரீ காலிங்கா**

இணுவில்

தினசரி 6-30, 9-30

பிரிபோயா, போயா 2-30 மணி

ஜெமினி கணேசன் - பத்மினி

நடித்த

**ம ல் லி கா**


கந்தையா பரமு அவர்களிடம் 30-6-66 தொடக்கம் 30-6-67 வரை வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவை 30-10-69 வியாழக்கிழமை காலை 10 மணி தொடக்கம் அதேயிடத்தில் வைத்து பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனவாளர்,
1780 வண்ணார்பண்ணை.


**வி ன் ஸ ர்** (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்

ஜெமினி கணேசன் — சாவித்திரி நடித்த

**களத்தூர் கண்ணம்மா**

(புதிய கொப்பி)

**ராணி**

(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]

சிவாஜி — நிர்மலா
சௌகார் ஜானகி
நடித்த

**லக்ஷ்மி கல்யாணம்**

இப்பொழுது நடைபெறுகிறது


**வெலிங்டன்**

[யாழ். நகர்]

தினசரி 2-30, 6-30 9-30 போயா, பிரிபோயா 4 காட்கள்

கெப்பிட்டல் (கொழும்பு)

பிளாஸா (கொழும்பு)



ரவிச்சந்திரன் ★ ராஜஸ்ரீ

நாகேஷ் ★ அசோகன் ★ ஸ்ரீரஞ்சனி

வசந்தா ★ மனோகர்

நடித்த

ஜரிஸ் மூவிஸாரின்

**நீயும் நானும்**


## மௌனம்

பருத்தித்துறை, புதன்

இலங்கைப் பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சையில் தேறியவர்களென அறிவிக்கப்பட்டு, மனுப்பத்திரங்கள் கோரிய சில மாணவருக்கு பல்கலைக்கழகம் எவ்வித அறிவித்தலும் இதுவரை கொடுக்காமையினால் அவர்கள் திரிசங்கு சொர்க்க நிலையில் இருப்பதாகத்தெரிகிறது.

சில அதிபர்களின் அவசரத் தந்திகளுக்கும் இதுவரை பல்கலைக்கழகம் விடை கொடுக்கவில்லையாம் இம்மாதம் முடிவுற்ற விண்ணப்பங்களின் பின் இவர்கள் அடுத்த பரீட்சைக்கும் முடியாதுள்ளனர்.


**வெஸ்லி சினிமா**

மானிப்பாய்

தினசரி 6-30, இரவு 9-30

பிரிபோயா, போயா 2 30 மணி

சிவாஜி - சரோஜாதேவி

நடித்த

**பாலும் பழமும்**

வல்வெட்டித்துறை

**ரஞ்சனா தியேட்டர்**

தினசரி 6-30, 9-30.

பிரிபோயா, போயா 2-30

ரகுநாதன் — சந்திரகலா

நடித்த

**நி ர் ம ல ா**

**ர ா ஜ ா**

(யாழ்ப்பாணம்)

Daily 4-45, 7, 9-45 P.M.
Poya, Prepoya 4 Shows

Marlon Brando
John Saxon
in
THE APPALOOSA
(scope & color)

**REGAL** JAFFNA

Daily 4-45, 7& 9-45p m.
Poya, Prepoya 4 Shows
Christopher Lee
Maria Rohm
in
THE BLOOD OF
FU MANCHU
(Adults Only)

**MANOHARA**
JAFFNA

Daily 4-45, 7-00&9-45pm
Poya Prepoya 10-30 A. M.

Restless Reckless
Violent- There never was a man like
'B L U E'
Terence Stamp
Jornna Petter
in
'B L U E'
(Scope-color)


திரு. வி. நடராசா மத்தியஸ்தராக் கடமையாற்றினார்.

## பொலிசை இராணுவம் வென்றது

பருத்தித்துறை, புதன்

பெரியதோட்டம் சுடர் ஒளி விளையாட்டுக் கழக ஆதரவின்கீழ் பலாலி இராணுவக்கோஷ்டியும், பருத்தித்துறை பொலிஸ் கோஷ்டியும் கரபந்தாட்ட 'செற் அப்' போட்டியில் கலந்துகொண்டபோது இராணுவக் கோஷ்டி 2-1 ஆட்டங்களால் வெற்றியீட்டியது. திரு. கே இரத்தினவடிவேல் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

லிஸ்ட் கட்சிப்பிரமுகர்கள் கலந்து கொள்வர்.

தெல்லியடி லட்சுமி தியேட்டர் மண்டபத்தில் காலை 9 மணிக்கு மகாநாடு ஆரம்பமாகும். பின்னர் மாலையில் கரணவாய் மூத்த விநாயகர் கோவிலடியில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

## நேர்முகத் தேர்வு

மல்லாகம், புதன்

மயிலிட்டி தெற்கு கிராம சேவையாளர் பிரிவு விவாகப் பதிவு காரர் பதவிக்கான நேர்முகப்பரீட்சை இம்மாதம் 17-ம்திகதி காலை குரும்பசிட்டி தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

யாழ். மத்திய கல்லூரி. இலங்கைப் பொறியியல் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார்.

இவ் நெடுந்தீவு மத்தியைச் சேர்ந்த குமாரசாமி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன்

சிதம்பரம் கலந்துகொள்வார்.

# இன்றைய பலன்

### சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

30-ந் திகதி (16 - 10 - 69)

**மேஷம்-** கடந்துபோன சம்பவம் ஒன்று குறித்துக் கவலைகள் அதிகமாகும். பலவழிகளிலும் பணம் செலவாவதற்கு இடமுண்டு. சிறிய தவறுக்குக்கூடப் பெரிய தண்டனை கிடைக்கலாம். மனத்திடம் வேண்டும்.

**ரிஷபம்-** இதயத்தில் எரிமலை குமுறும். உள்வீட்டிலேயே உபத்திரவங்கள் அதிகரிக்கும். குழந்தையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம். ஆணவப்போக்கினால் மற்றவர்களுடைய வெறுப்பைச் சம்பாதிக்கநேரிடலாம்.

**மிதுனம்-** பேச்சுவன்மையால் பிறருடைய நன்மதிப்பைப் பெறுவீர்கள். கல்வித்துறையில் திருப்திகரமான முன்னேற்முண்டு. சிலருக்கு அதிர்ஷ்ட இலாபமும் கிடைக்கலாம். சிறப்பான தினம்.

**கடகம்-** வாழ்க்கை மந்தகதியில் நடைபெறும். எதிர்பாராத தடைகளால் முன்னேற்றம் பாதிக்கப்படும். சகோதரவழிமூலம்சஞ்சலமான செய்தியும்கிடைக்கலாம். உடல் நலத்தைப் பேணவும்.

**சிம்மம்-** இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு இன்று இலாபகரமான தினம் வாகனச் சொந்தக்காரர்கள் அதிக பயனடைவர். ஆசிரியத் தொழிலில் இருப்போருக்கும் செல்வாக்கு வளருவதற்கு இடமுண்டு.

**கன்னி-** இதயம் இன்று இன்பத்தால் விம்மும். குடும்பத்தில் உறவுமுறைகள் மிகவும் அன்புகொண்டதாக இருக்கும் புத்திரர்களாலும் மதிப்பு உயருவதற்கு இடமுண்டு. சுமுகமான தினம்.

**துலாம்-** எதையும் முன்னணியில் நின்று செய்வதை இன்று பின்போடவும். பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு. விஷமிகளின் புனைந்துரைகள் உங்களுக்கு வேதனையைத்தரும். பொறுமை விரும்பத்தக்கது.

**விருச்சிகம்-** வாழ்க்கையின்று மல்லிகைத்தோட்டம் போல் மணம் பரப்பிக்கொண்டிருக்கும். காதல் சிட்டுக்களுக்கு இன்று கவர்ச்சிகரமான தினம். பெரியோர்கள் ஆதரவும் கிடைக்கும்.

**தனுசு-** வியாபாரத்துறையில் ஈடுபடுபவர்கள் இன்று அதிகமுதலீட்டைத்தவிர்த்துக்கொள்ளவும். எதிர்பார்த்த விடயத்தில் நஷ்டம் ஏற்படலாம். நண்பர்களாலும் தொல்லைகள் அதிகரிக்கும்.

**மகரம்-** பொதுப்பணிகளில் ஈடுபடவிரும்புவீர்கள். குறிப்பாக அரசியல் வாதிகளுக்குப் புதிய ஆர்வம் பிறக்கலாம். சிலர் புண்ணிய ஸ்தல யாத்திரையை மேற்கொள்ளுவதற்கும் இடமுண்டு.

**கும்பம்-** கடமையின்மூலம் சிறப்படைவீர்கள். மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக்கிடைக்கும் தொழில் சம்பந்தமாக வெளியூருக்குப் பயணமாகலாம். செலவைக் கட்டுப்படுத்தவும்.

**மீனம்-** பொருளீட்டுவதில் புதிய பாதையை வகுத்துக் கொள்ளுவீர்கள். கஷ்டங்கள் சில நிவர்த்தியாகும். வீட்டில் சுபகருமம் நடைபெறுவதற்கும் இடமுண்டு. நித்திப்கான தினம்



**கட்டுக் குலையாத மேனி வனப்பின் இரகசியம்**



கடைந்தெடுத்த சிலை போன்று கட்டுக்குலையாத மேனி வனப்புடன் திகழ்வதற்குப் பண்டைக் காலக் கீழ்த்திசை மங்கையர் சந்தனத்தைக் குழைத்துச் சருமத்திற் பூசி வந்தனர். அதே சந்தனத்தின் அருங்குணங்கள் யாவும் நிரம்பப் பெற்றது தூய மைசூர் சந்தன எண்ணெய் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ராணி சந்தன சோப்.

**ராணி**
**சந்தன சோப்**

- அழகு சோப்புகளின் ராணி; அழகு ராணிகளின் பிரிய சோப்.




**ராணி**
சந்தன சோப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று ஆண்டுகளில் வியட்னும் போர் முடிவுக்கு வந்துவிடும்

## அதிபர் நிக்ஸன் நம்பிக்கை

நியூயோர்க் அக்15

இன்னும் மூன்று ஆண்டுகளில் வியட்னும் போர் முடிவடைநது விடுமென்று அமெரிக்க அதிபர் நிக்ஸன் நம்பிக்கை தெரிவித்திருக்கிருர்.

வெள்ளை மாளிகையில் நேற்று இடம்பெற்ற ஒரு நிகழ்ச்சியின் போது அதிபர் நிக்ஸன் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இதற்கிடையில் இன்று அமெரிக்கா எங்கும் வியட்னும் போரை எதிர்த்துப் பெரிய எடுப்பில் ஆர்ப்பாட்டங்கள் நடை பெறுகின்றன.

இந்த ஆர்ப்பாட்டங்களினுல் தமது வியட்னும் கொள்கை மாறிவிடாது என்று அதிபர் நிக்ஸன் ஏற்கனவே அறிவித்திருக்கிருர்.

கடந்த வாரம் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது பலத்த மோதல்களும் வன்முறைகளும் இடம்பெற்றன. இன்று நாடுமுழுவதிலும் இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களின் போது வன் முறைகள் எதுவும் இடம் பெருமல் பார்த்துக் கொள்வதற்காக அதிகாரிகள் பலத்த பந்தோபஸ்து ஏற்பாடுகள்செய்துள்ளனர். எந்த நிலைமையையும் சமாளிக்க பொலிசார் தயாராய் இருக்கின்றனர்.



நேற்று அமெரிக்க செனட் சபையில் குடியரசுக் கட்சியையும் ஜனநாயகக் கட்சியையும்சேர்ந்தஇரு செனட்டர்கள் வியட்னும் போரில் ஈடுபட்டுள்ள அமெரிக்க தரைப்படையினர் அனைவரையும் இரண்டு ஆண்டுகளுக்குள் திருப்பியழைத்து விட வேண்டும் என்று வற்புறுத்தினர்கள்.

## அரபுக்கள் மூவர் கொல்லப்பட்டனராம்

டெல்அவிவ், அக்.15

எகிப்தியபடைகளுக்கும் இஸ்ரேலியருக்குமிடையில் நேற்று இடம்பெற்ற ஒரு சண்டையில் மூன்று அராபியர் கொல்லப்பட்டதாவும் இஸ்ரேலியர் தரப்பில் சிலர் காயமடைந்ததாகவும்இங்கு அறிவிக்கப்பட்டது.

அரபுக் கொமாண்டோக்கள் அணியொன்று சூயஸ் கால்வாய்க்கு குறுக்கே இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ளபகுதிகளுக்குள் பிரவேசித்து கடும் தாக்குதல்களில் இறங்கியதாகவும், பலத்த நஷ்டம் விளைவித்ததாகவும் கூறப்படுவது பற்றி இஸ்ரேலியர் ஒன்றும் அறிவிக்கவில்லை. ஆனுல் பல இடங்களில் கைகலப்புகள் இடம்பெற்றதாக மட்டும் தெரிவிக்கப்பட்டது.

பம்பாயில்

## சிவசேனை கெடுபிடி மீண்டும் ஆரம்பம்

### தமிழர் கடையைச் சூறையாடினர்

பம்பாய், அக் 15

பம்பாயில் மீண்டும் சிவசேனையினர் தமிழர்களுக் புகையிரத நிலையங்களிலும் சிவசேனையினர் ஆர்ப்பாட்டம் செய்து சொத்துக்களுக்

## பிரி. நிருபருக்கு ஓ.பி.ஈ. பட்டம்

லண்டன், அக். 15

சீனுவில் இரண்டாண்டுகளுக்கு மேல் சிறை வைக்கப்பட்டிருந்து இப்பொழுது லண்டனுக்குத் திரும்பி வந்திருக்கும் பிரிட்டிஷ் பத்திரிகை நிருபர் அந்தோனி கிரே என்பவருக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் பட்டம் வழங்கிக் கௌரவித்திருக்கின்றது.

ஓ.பி.ஈ. (ஓடர் ஆஃப் பிரிட்டிஷ்- எம்பயார்) என்ற கௌரவப் பட்டம் அந்தோனி கிரேக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பட்டத்துக்கு பிரிட்டிஷ் மகாராணி தம் சம்மதத்தை அளித்துள்ளார்.

இலங்கையில்

## கேம்பிரிஜ் பேராசிரியர்

கொழும்பு, செவ்

டாக்டர் கொலை வழக்கு

## இரு எதிரிகள் பிணையில் சென்றனர்

கோட்டை, புதன்

டாக்டர் பந்துலுபெரேரா கொலை வழக்கில் 3-ம், 4-ம் எதிரிகள் தலா 5000 ரூபா பிணையில் செல்ல கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட் திரு ஈ எம் டி சில்வா நேற்று அனுமதித்தார்

பிணையில் சென்ற 3-ம், 1-ம் எதிரிகளும் நேற்று 4-ம், 2-ம் எதிரிகளுடன் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டனர்

இவ்வழக்கு விசாரணை சுப்பிரீம் கோர்ட்டிற்குப் பாரப்படுத்தப்பட்டிருக்கிறது பிணை மனுவை வழக்கறிஞர்களான திரு ரி பி ஏகநாயக்கா, திரு எச் ஜோ பெரேரா ஆகியோர் சமர்ப்பித்தனர் மாஜிஸ்டிரேட் 3-ம், 4-ம் எதிரிகளை பிணையில் செல்ல அனுமதித்து மற்றும் 2 எதிரிகளையும் றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

## அஞ்ச வேண்டாம்

யாழ்ப்பாணம், வியா

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் இனிமேல் ஊசி ஏற்றப்போகும் நோயாளர்களுக்கு ஊசி மாற்றி ஏற்றப்படுகிறதா என்ற சந்தேகம் ஏற்படத் தேவையில்லை என வைத்திய சுப்பிரின்டன் டாக்டர் சண்முகநாதன் தெரிவிக்கிருர்.

வெளிநோயாளர்சிகிச்சை நிலையத்தில் ஊசி ஏற்றிய பின்னர் அந்தப் பகுதிகளுக்கென வைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட கருவிகளில் மட்டுமே அவற்றைக் கொதிக்கவைக்க வேண்டுமென்று வைத்திய சுப்பிரின்டன் தாதிமார்களுக்கு உத்தரவிட்டுள்ளார். இவ்விதம் செய்வதால் ஊசிமாறுகின்றதென்ற சந்தேகம் எழமாட்டாதென்றும், இதுபற்றிப் புகார்கள் வரமாட்டாதென்றும்அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் காதுக்குத்து

## மாவட்ட தேசிய பொருட்காட்சி

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தின் ஆதரவிலான மிகப்பெரிய மாவட்டதேசிய பொருட்காட்சி யொன்று அடுத்தவருட முற்பகுதியில் நடைபெறவிருக்கின்றது.

கைத்தொழில். விவசாய, இயந்திரத் தொழில் ஆகிய பல்வேறு துறைகளிலும் கடந்த 10 ஆண்டுகளில் யாழ்ப்பாண மாவட்டம் அடைந்துள்ள முன்னேற்றத்தைச் சித்தரிக்கும் வகையில் இப்பொருட்காட்சி அமையும்.

அடுத்தவருடம் பெப்ரவரி மாதம் முற்பகுதியில் இப்பொருட்காட்சி தொடர்ந்து 5 தினங்கள் நடைபெறும்.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு பிரான்சிஸ்சி பீட்டர்ஸ் தலைமையிலான பல்வேறு குழுக்கள் விழா ஒழுங்குகளைக் கவனித்து வருகின்றன இது சம்பந்தமான ஆலோசனைக்கூட்டமொன்று நேற்றுக்காலை அரசாங்க செயலகத்தில் நடைபெற்றது. (கா. நி)

......

## படுக்கையின்றி நோயாளிகள் அவதி

முல்லைத்தீவு, வியாழன்

முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் போதிய படுக்கை வசதிகள் இல்லாது வார்டுகளில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெறும்நோயாளர் மிகவும் கஷ்டமடைகின்றனர். நிலத்தில் துணிகளை விரித்து நோயாளர்கள் படுக்கும், நிலை இங்கு ஏற்பட்டுள்ளது.இதுபற்றிப்பல தடவை மேலதிகாரிகட்கு அறிவித்தும்இதுவரைபலன்கிடைக்கவில்லையாம்.

## கவிஞருக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், வியாழன்

அகில இலங்கை காந்தி நூற்றுண்டு விழா கவிதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றுக்கொண்ட சுண்டிக்குளி யாழ். நாடக கலாமன்றத்தலைவரான கவிஞர் கே. வி. ஐயாத்துரையைப் பாராட்டி அரசடி வீதி ஐனசக்தி சனசமூகநிலையம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

காங்கிரஸ் நெருக்கடி

## இந்திரா - சின்டிகேட் மோதல் வலுக்கிறது

புதுடில்லி, அக். 15

அகில இந்தியக் காங்கிரஸ் பதவியிலிருந்து தான் ராஜினுமாச் செய்யப்போவதில்லையென்று திரு. நிஜலிங்கப்பா கூறியுள்ளார்.

காரியக் கமிட்டியிலிருந்து இந்திரா காந்தியின் ஆதரவாளரான திரு. சுப்பிரமணியத்தை நீக்க நடவடிக்கை எடுத்துதைத் தொடர்ந்து திரு. நிஜலிங்கப்பாவை ராஜினுமாச்செய்யும்படி இந்திரா காந்தியின் ஆதரவாளர்கள் வற்புறுத்தி வருவது தெரிந்ததே.

### குற்றத்தை நிரூபிக்கட்டும்

'என்னுடைய புகழைக் கெடுக்கச் சிலர் விரும்புகிருர்கள். நான் கட்சிக்கு என்ன தவறு செய்தேன் என்பதையும், என் கடமையிலிருந்து எவ்விதம் தவறினேன் என்பதையும் என் மீது குற்றம் சாட்டுபவர்கள் நிரூபிக்கவேண்டும்' என்று திரு. நிஜலிங்கப்பா கேட்டுள்ளார்.

### சஞ்சீவையா கண்டனம்

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னுள் தலைவர் திரு. சஞ்சீவையா காரியக் கமிட்டியிலிருந்து திரு. சுப்பிரமணியத்தை விலக்குவது அநீதியானது என்று கூறியுள்ளார்.

உத்தரப்பிரதேச மாநில காங்கிரஸ் தலைவர் கமலபதி திரிபாதி, ஆந்திர காங்கிரஸ் தலைவர் ககாணி வெங்கடரத்தினம் ஆகியோரை பதவியிலிருந்து விலகும்படி நிஜலிங்கப்பா அனுப்பிய நோட்டீஸ் செல்லுபடியாகாதெனவும், காரியக் கமிட்டி உறுப்பினர் ஒருவரை பதவியிலிருந்து விலக்குவது பற்றி காங்கிரஸ் விதிகளில் எதுவும் குறிப்பிடப்படவில்லையென்றும் திரு சஞ்சீவையா குறிப்பிட்டார்.

### இந்திரா வலியுறுத்து

லட்சத்தீவுகளில் 4 நாட்கள் சுற்றுப்பயணம் செய்துவிட்டுத் திரும்பியுள்ள திருமதி இந்திரா காந்தி காரியக் கமிட்டிக்கூட்டத்தைக் கூட்ட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

நாட்டில் வகுப்புக் கலவரங்களும் மற்றும் முக்கிய பிரச்னைகளும் கிளம்பிய போது காரியக்கமிட்டி உடனடியாகக் கூடி விவாதிப்பது வழக்கமாக இருந்தது. இப்போது நாட்டில் இப்படிப்பட்ட முக்கியமான பிரச்னைகள் தோன்றியுள்ளன அரசியல் பிரச்னைகளுக்கு மட்டுமன்றி இப்போது ஏற்பட்டுள்ள பிரச்னைகள் பற்றியும் ஆராய்வதற்காக காரியக் கமிட்டியை உடனடியாகக் கட்டவேண்டும் என்றும் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூறிள்ளார்.

### கண்டன அறிக்கை

இதற்கிடையில் பிரதமர் இந்திரா காந்தியைக் கண்டித்து காரியக்கமிட்டிக் கூட்டத்தில் ஓர் அறிக்கையைத் தாக்கல் செய்ய திரு.

## இன்று புதிய பாலம் திறக்கப்படும்

கோப்பாய், புதன்

பொதுமராமத்து அமைச்சினுல் கோப்பாய்த்தொகுதியில் புதிய செம்மணி வீதியில் அமைக்கப்பட்ட பாலம் நாளைப் பிற்பகல் திறந்து வைக்கப்படவுள்ளது.

இப்புதியபாலத்தை கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை உத்தியோகபூர்வ முறையில் திறந்துவைக்க கோப்பாய் கி. ச. தலைவர் திரு. பரமானந்தராசா பொறுப்பினை ஏற்பார்.

பிரிட்டிஷ்

## புத்தக பிரசுரிப்பாளர் வருகிருர்கள்

கோட்டை புதன்

பிரபல பிரிட்டிஷ் புத்தக பிரசுரிப்பாளர்களைக் கொண்ட வர்த்தக தூது கோஷ்டியொன்று இம்மாத இறுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யும் இலங்கையின்

## கூட்டுறவு மகாநாடு

மானிப்பாய், புதன்

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபையின் 32 வது வருடாந்தக் கூட்டுறவு மகாநாடு இம்மாதம் 24 ம்திகதி வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும். இம்மகாநாட்டை மக்கள் வங்கித்தலைவர் திரு. ரி. பி. பணபொக்கே ஆரம்பித்துவைப்பார்.

யாழ்ப்பாணமாவட்ட அரசாங்கஅதிபர் திரு எப். பீட்டர்ஸ்கூட்டுறவுஆக்க ஆணையாளர் திரு டபிள்யூ. பத்திராஜு முதலியோடும் கூட்டுறவாளர்களும் இம்மகாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள். வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபைத் தலைவர் திரு. இ. இராசரத்தினம் தலைமைவகிப்பார்.

## விவசாயிகளின் இக்கட்டான நிலை

சங்கானை, புதன்

விதை உருளைக்கிழங்கு தேவையானவர்கள் முதலில் உரம் வாங்கவேண்டும்என்ற நிபந்தனை ஒன்றை கிருஷிக இலாகா விடுத்துள்ளது இதனுல் உரம் வாங்கிய றிசீற்றைக்காட்டியே விதை உருளைக்கிழங்கைப் பெறமுடிகிறது.

உரம் வாங்காமல் சமாளிக்கக்கூடிய கமக்காரர் இந்த நிபந்தனையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக ஏழைவிவசாயிகள் பலர் பலத்த கண்டனம் தெரிவிக்கின்றன.

## யாழ். மாவட்டத்துக்கு சிங்களப் பாடசாலைகள்

கோட்டை, புதன்

கல்விகலாச்சார அமைச்சு அடுத்தமாதம் யாழ் மாவட்டத்தில் இரு புதிய சிங்களப் பாடசாலைகளை நிறுவத் தீர்மானித்துள்ளது. காங்கேசன்துறை சுன்னுகம் ஆகிய இடங்களிலுள்ள சிங்கள மாணவர்களின்நன்மையை உத்தேசித்தே மேற்படி பாடசாலைகளை நிறுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஆரம்பம்

## தமிழர் கடையைச் சூறையாடினர்

பம்பாய், அக் 15

பம்பாயில் மீண்டும் சிவ சேனையினர் தமிழர்களுக் கெதிரான ஆர்ப்பாட்டத் தில் இறங்கியுள்ளனர். கல்யாண் என்ற இடத்தில் நடந்த சிவசேனைப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்ட சிவசேனையைச் சேர்ந்தவர்கள் பயங்கர கலவரமொன்றை உண்டாக்கினர்கள்.

தமிழர் ஒருவருக்குச் சொந்தமான கடையொன்றுக்குள் புகுந்த சிவசேனையினர் அங்கிருந்த பணத்தையும் பொருள்களையும் சூறையாடினர்கள்.

இவர்களை அட்டூழியங்களை அடக்க வந்த பொலிஸார் மீது சிவசேனையினர் கற்களை வீசினர்கள். கல்வீச்சில் தலைமைப் பொலிஸ்காரர் உட்பட 3 பேர் காயமடைந்தனர்.

பல இடங்களிலும் பொலிசாருக்கும் சிவசேனையினருக்குமிடையே கைகலப்பு நடந்தது. கல்யாண், தாகூர்லி, குர்லா, மாதுங்கா, பாரேல், சிரோ ஆகிய புகையிரத நிலையங்களிலும் சிவசேனையினர் ஆர்ப்பாட்டம் செய்து சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தனர்.

கடந்த பெப்ரவரி மாதம் நடந்த கலவரத்தின்போது தமிழர் உட்பட 45 பேர் இறந்ததும் 450 பேர் காயமடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

......

## தலைவனைத் தந்த நகரம்

சென்னை, அக் 15

'காஞ்சிபுரம்' பல்லவர்களின் தலைநகரமாக விளங்கியது. இப்போது மாவட்ட தலைநகராக விளங்குகிறது. இந்தியாவுக்கே வழிகாட்டக்கூடிய தலைவனைத் தந்த நகரம் இது.'

காஞ்சிபுரத்தில் புதிதாகக் கட்டப்பட்ட கலக்டர் கந்தோர், பொலிஸ் சுப்பிரின்டன் அலுவலகம், அரசாங்க சிப்பந்திகளின் குடியிருப்பு ஆகியவைகளின் திறப்பு விழாவில் தலைமை தாங்கிப் பேசுகையில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி இவ்வாறு குறிப்பிட்டார்.

'நஷ்டம் ஏற்பட்டபோதிலும் மதுவிலக்கை நாம் ஏழைகளின் நன்மைக்காக அமுல்நடத்தி வருகிறோம். வரட்சி நிவாரண நிதிக்காக ரூ 16 கோடி செலவிட்டுள்ளோம் என்றும் திரு. கருணாநிதி குறிப்பிட்டார்.

— —

## ஏ. வி. எம். ராஜனுக்கு பரிசு

சென்னை, அக் 15

'ஆபாசம் இல்லாத பக்திப்படம் 'துணைவன்' த் துணிச்சலுடன் தயாரித்த சின்னப்பாதேவர் பாராட்டுக்குரியவர்' என துணைவன் பட நூறுவதுநாள் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழரசுக்கழகத் தலைவர் திரு. ம. பொ. சி. குறிப்பிட்டார்.

விழாவுக்கு தென்னிந்திய சினிமா வர்த்தக சங்கத்தலைவர் திரு ஏ எல் சீனிவாசன் தலைமை தாங்கினர்.

இப்படத்தில் கதாநாயகனாக நடித்த நடிகர் ஏ வி எம் ராஜனுக்கும் மற்றும் நடிகர் நடிகைகளுக்கும் 'வெள்ளிக்கோபுரம்' பரிசளிக்கப்பட்டது.

ருமேனியாவிடமிருந்து

## 10 கப்பல்களை இந்தியா வாங்கும்

புதுடில்லி, அக் 15

ருமேனியாவிலிருந்து 10 கப்பல்களை இந்தியா வாங்குவதற்கான ஒரு ஒப்பந்தம் இன்று டில்லியில் கைச்சாத்திடப்பட்டது.

இதற்கு 24 கோடி ரூபாய் செலவாகலாமெனத் தெரிகிறது. இதற்கான பணத்தை ரூபாயாகவே கொடுக்கும் இந்தச் செலவுகளைச் சமாளிக்க ருமேனியா கடன் வசதிகள் செய்து கொடுக்கும்.

தற்பொழுது இந்தியாவந்துள்ள ருமேனியா அதிபர் நிக்கலாய் செலசெஸ்கோ குழுவினருக்குப் பிரதமர் இந்திராகாந்தி இன்று பகல் உணவு அளித்துக் கௌரவித்தார்.

## ஷேக் அப்துல்லா

புதுடில்லி, அக். 15

காஷ்மீர் தலைவர் ஷேக் அப்துல்லா நேற்று பாகிஸ்தான் ஹைகமிஷனருடன் இரவு விருந்து சாப்பிட்டார். இரவு விருந்தின்போது பாகிஸ்தான் ஹைகமிஷனரை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்.

எல்லைக்காந்தி திரு. கான் அப்துல் கபார்கானையும் ஷேக் அப்துல்லா முன்னர் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

...ந்தை அளித்துள்ளார்.

இலங்கையில்

## கேம்பிரிஜ் பேராசிரியர்

கொழும்பு, செல்

கேம்பிரிஜ் சர்வகலாசாலையைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவர் தற்சமயம் இலங்கை வந்திருக்கிறார். இலங்கையின் கிராம, விவசாய அபிவிருத்தித்திட்டங்களை படித்தறிவதே இவரது விஜயத்தின் நோக்கமாகும்.

டாக்டர் ஜி. ஐ. ஜோன்ஸ் கேம்பிரிஜ் சர்வகலாசாலையில் மனிதவியல் பேராசிரியராகவும், இச்சர்வகலாசாலையின் வெளிநாட்டு ஆராய்ச்சிக் கமிட்டி அங்கத்தவராகவும் இவர் கடமையாற்றி வருகிறார். இந்தியாவில் 6 வார சுற்றுலாவை முடித்துக் கொண்டு கடந்த 11ந் திகதி இலங்கை வந்த டாக்டர் ஜோன்ஸ் இங்கு இரண்டு வாரங்கள்வரை தங்கியிருப்பார். பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சின் ஆதரவின்கீழ் இவரது இந்த ஆராய்ச்சி சுற்றுப்பிரயாணம் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. இவர் தமது இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டதும் பாகிஸ்தானுக்குச் செல்வார்.

டாக்டர் ஜோன்ஸ் தமது மனைவியுடன் இங்குவந்திருக்கிறார். திருமதி ஜோன்ஸ் தமது கணவருக்கு ஆராய்ச்சி உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

— —

## தீர்மானம நிறைவேற்றியும் பயனில்லை

ஊரைதீவு புதன்

ஊரைதீவில், புங்குடுதீவு கிராமசபையின் ஆயுர்வேத வைத்தியசாலைக்கிளை ஒன்று நிறுவப்பட்டு வாரம் இரு தடவையாவது வைத்தியர் வந்துபோக வேண்டுமென்ற தீர்மானம் புங்குடுதீவுகிராம சபையில் நிறைவேற்றப்பட்டும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த நிலை பற்றிப் பொதுமக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

— —

## மறை பரப்பு

பண்டத்தரிப்பு, புதன்

எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை சத்திய திருச்சபையில் மறை பரப்பு ஞாயிருகக் கொண்டாடப்பட விருக்கிறது. இதனையொட்டி ஆலயங்களில் விசேஷ ஆராதனைகளும், வேண்டுதல்களும் இடம் பெறவுள்ளன.

...தாக்களுக்கு உத்தர விட்டுள்ளார். இவ்விதம செய்வதால் ஊசிமாறுகின்ற தென்ற சந்தேகம் எழமாட்டாதென்றும், இதுபற்றிப் புகார்கள் வரமாட்டாதென்றும்அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் காதுக்குத்து நோய்க்கு ஊசி போடச் சென்றமாணவன் மயக்க நிலையடைந்ததாகவும், ஊசி மாறி ஏற்றப்பட்டதினாலேயே இவ்வாறு நேர்ந்ததாகவும் மாணவனின் பெற்றோர் மேலிடத்தில் புகார் செய்திருந்தனர். இவ்வித பல புகார்களைத் தொடர்ந்தே இவ்விரு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.

...போட்டியில் முதற் பரிசு பெற்றுக்கொண்ட சுண்டிக்குளி யாழ். நாடக கலாமன்றத்தலைவரான கவிஞர் கே. வி. ஐயாத்துரையைப் பாராட்டி அரசடி வீதி ஜனசக்தி சனசமூகநிலையம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

மல்லாகம் கிராமசபைத் தலைவர் திரு. வி. பொன்னம்பலத்துக்கு வரவேற்பு விழாவொன்றை நடாத்தவும், சிறுபான்மைத் தமிழர் பிரதிநிதியாக செனட் சபையில் திரு. த. இராசசிங்கத்தை நியமிக்கும்படி அரசாங்கத்தைக் கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## புத்தக பிரசுரிப்பாளர் வருகிறார்கள்

கோட்டை புதன்

பிரபல பிரிட்டிஷ் புத்தக பிரசுரிப்பாளர்களைக் கொண்ட வர்த்தக தூது கோஷ்டியொன்று இம்மாத இறுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யும் இலங்கையின் புத்தகதேவைகளை, குறிப்பாக பாடப்புத்தகங்களின் தேவைகளை அறிந்து செல்வதே இவர்களது விஜயத்தின் நோக்கமாகும் அக்டோபர் 31ந் திகதி இங்கு வரவிருக்கும் இத் தூது கோஷ்டி ஐந்து தினங்கள் வரை இலங்கையில் தங்கியிருக்கும்

விண்வெளியில் மேடை அமைக்கும் சோவியத் முயற்சி

# இரு கலங்கள் அருகே நெருங்கி பரிசோதனை

# ஆளில்லா கலமொன்றும் விண்ணில் சுற்றுகிறது

மாஸ்கோ, அக். 15

சோவியத் யூனியன் விண்வெளிக்கு அனுப்பியுள்ள விண்வெளிக் கலங்களில் இரண்டு மிகமுக்கியமான சோதனைகளை நேற்று நடத்தியிருப்பதாக அறிவிக்கப்பட்டது. அதேசமயம் ஆளில்லாக் கலம் ஒன்றையும் சோவியத் யூனியன் விண்ணுக்கு அனுப்பியிருக்கின்றது.

சோயஸ்-7, சோயஸ்-8 ஆகிய இருகலங்களும் அருகருகே பல தடவைகள் நெருங்கிவந்ததாகவும், அந்தக்கட்டத்தில் பல புகைப்படங்கள் எடுக்கப்பட்டதாகவும் நுட்பமான சோதனைகள் பல நடத்தப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. விண்ணில் மேடை அமைக்கும் திட்டத்துக்கு இவை அவசியமான சோதனைகள் என்று கூறப்பட்டன.

இன்னொரு கலமான சோயஸ்-6 பற்றி எதுவும் அறிவிக்கப்படவில்லை.

இந்தக்கலங்களை ஒன்ருக இணைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கலாம் என்றும் ஆனல் கடைசி நிமிடத்தில் ஏற்பட்ட ஏதாவது தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அது கைவிடப்பட்டிருக்கலாம் என்றும் மேற்கத்திய அவதானிகள் கூறுகிறார்கள்.

### அப்பலோ-11 வீரர்கள்

சந்திரனில் போய் இறங்கி பூமிக்குத் திரும்பிவந்த அப்பலோ-11வீரர்கள்நீல்ஆம்ஸ்ரோங், மைக்கேல் கொலின்ஸ், ஆல்ட்ரின் ஆகிய மூவரும் இப்பொழுது லண்டன் வந்திருக்கிறார்கள். பிரதமர் திரு. வில்சனுடன் அவர்கள் விருந்துண்டார்கள். மகாராணியையும் சந்தித்தார்கள்.

சந்திரனில் முதல் கால் அடி வைத்தவீரர் நீல்ஆம்ஸ்ரோங் நிருபர்களிடம் பேசுகையில் 1972-ம் ஆண்டுக்கு முன்னர் விண்ணில் மேடை அமைக்கும் முயற்சியில் அமெரிக்கா இறங்காது என்று கூறினார்.

### சோவியத் ஆளில்லா கலம்

சோவியத் யூனியன் ஆளில்லா கலம் ஒன்றையும் விண்வெளிக்கு அனுப்பியிருக்கின்றது. இந்தக்கலத்துக்கும் ஏற்கனவே பூமியைச் சுற்றிக் கொண்டிருக்கும் சோயஸ் கலங்கள் நடத்தும் ஆராய்ச்சிக்கும் சம்பந்தமுண்டா என்பதுபற்றி அறிவிக்கப்படவில்லை. இந்தக் கலம் சரியான பாதையில் சரியாக இயங்கிக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

......

## பௌத்தமதம் பப்பச் செலவிடப்பட்டது

கோட்டை, புதன்

பௌத்த மதத்தை வெளிநாடுகளில் பரப்புவதற்காக இலங்கை அரசாங்கம் சென்ற வருடம் ஒரு லட்சம் ரூபா செலவுசெய்தது. அமெரிக்கா, ஜெர்மனி பாரதம் உட்பட 7 நாடுகளில் இதற்கென அரசாங்கம் மேற்படி தொகையைச் செலவுசெய்தது.

— —

## ரூ. 35 கோடிக்கு மேல் வருமானம்

கோட்டை, புதன்

கடந்த 5 வருடங்களில் துறைமுக சரக்குக்கூட்டுத்தாபனம் 35 கோடி ரூபாவுக்கு மேலான வருமானத்தைப் பெற்றுள்ளது.

...காரியக் கமிட்டியை உடனடியாகக் கட்டவேண்டும் என்றும் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூறிள்ளார்.

### கண்டன அறிக்கை

இதற்கிடையில் பிரதமர் இந்திரா காந்தியைக் கண்டித்து காரியக்கமிட்டிக் கூட்டத்தில் ஓர் அறிக்கையைத் தாக்கல் செய்ய திரு. நிஜலிங்கப்பா ஏற்பாடு செய்துவருவதாக கூறப்படுகிறது. கட்சியின் கொள்ககள் ஒழுங்காக நிறைவேற்றவில்லையென்றும் இந்திரா காந்திமீது குற்றஞ்சாட்டி அவர்மீது நடவடிக்கை எடுக்க திரு. நிஜலிங்கப்பா திட்டமிட்டிருக்கிறார் என்றும் கூறப்படுகிறது

பெங்களூர் காங்கிரஸ் மகாநாட்டில் நிறைவேற்றிய பொருளாதார தீர்மானத்தில் காணப்படும் 10 அம்சத் திட்டத்தில் வங்கிகள்தேசஉடமைஆக்கும்திட்டத்தைமட்டுமே இந்திரா நிறைவேற்றியுள்ளார். மற்ற ஒன்பது திட்டங்களையும் அவர் நிறைவேற்றத் தவறிவிட்டார்' என்று நிஜலிங்கப்பாவின் அறிக்கையில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

—

## பூட்டப்பட்ட கோவில் திறக்கப்பட்டது

சுழிபுரம், புதன்

சில தினங்களாகப் பூட்டப்பட்டு பூசைகள் நடைபெருமலிருந்த வட்டுக்கிழக்கு காசிப்பேரன்வயிரவ கோயில் இங்கு நடைபெற்ற பொதுமக்களின் சத்தியாக்கிரகத்தை தொடர்ந்துதிறக்கப்பட்டுள்ளது.

கோயிலைத் திறப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் பலவும் கைகூடாமல் போகவே ஆசிரியர் கா. துரைசிஙகம், திரு. சி. க. முத்தையா ஆகியோர் சத்தியாக்கிரகம் இருந்தனர். இதைத்தொடர்ந்து கோயில் திறக்கப்பட்டு பூசைகள் நடைபெற்றுவருகின்றன. நவராத்திரி பூசைகளும் தினமும் நடைபெறுகிறது.

...கல்விகலாச்சார அமைச்சு அடுத்தமாதம் யாழ் மாவட்டத்தில் இரு புதிய சிங்களப் பாடசாலைகளை நிறுவத் தீர்மானித்துள்ளது. காங்கேசன்துறை சுன்ணகம் ஆகிய இடங்களிலுள்ள சிங்கள மாணவர்களின் நன்மையை உத்தேசித்தே மேற்படி பாடசாலைகளை நிறுவ அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

இந்த நன்மையை உத்தேசித்தே அரசாங்கம் பூநகரி புத்தூர் ஆசிய இடங்களிலுள்ள இரு பௌத்த பாடசாலைகளையும் விரைவில் பொறுப்பேற்கவுள்ள து.

## வேலைநேரத்தை குறைக்க கோரிக்கை

கோப்பாய், புதன்

அகில இலங்கை அரசினர் பொதுக் காவலாளர் சங்கத்தினர் தமது வேலைநேரத்தை 12 மணித்தியாலத்திலிருந்து 8 மணித்தியாலமாகக் குறைக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சைககேட்டுள்ளனர்.

## மண்கும்பானில் தீர்த்தக்கேணி

வேலணை, புதன்

மண்கும்பான் கடற்கரையில் தீர்த்தக்கேணி அமைக்க இப்பகுதி மக்கள் தீர்மானித்துள்ளனர்,

கீரிமலை கேணியைப்போல் அமையும் இக்கேணியில் ஒருபுறம் நன்நீரும், மறுபுறம் கடல்நீரும் தேங்கியிருக்கும்.

இதற்கான ஆரம்ப வேலைகள் இவ்வருட இறுதிக்குள் நடைபெறுமெனஎதிர்பார்க்கப்படுகிறது.

— —

## வைரஜூபிலி

பண்டத்தரிப்பு, புதன்

யாழ். மேற்றிராசனத்தின் பல இடங்களிலும் ஆசிரியத்தொண்டும் இறைபணியும் ஆற்றி தற்போது மயிலிட்டியிலுள்ள திருக்குடும்பகன்னியர் வயோதிபர் இல்லத்தில் ஓய்வு பெற்று வரும் சங். சிஸ். மேரிபேர்த்தா இம்மாதம் 26-ம்திகதி தமது சந்நியாச 60-ம்ஆண்டு விழா வைக்கொண்டாடுகிறர்.

## மனைவி அழைப்பை நிராகரித்தார்; கணவன் தற்கொலை

யாழப்பாணம், வியா

கணவனின் அழைப்பை நிராகரித்தாராம்மனைவி இதனல் கணவன் நச்சுத்திராவகம் அருந்திஞராம்.

சுன்ஞகத்தில் நடைபெற்ற இச்சம்பவத்தில் அருளானந்தம் மாணிக்கம் (20 வயது)வாலிபரே மரணமானவராவர்

இவர் திருமணமாகி 7 மாதம் என்றும் இவரது மனைவி 4மாதக் கர்ப்பிணி என்றும் தனது மனைவியை தன்னுடன் வந்திருக்குமாறு இவர் அழைக்க மனைவி செல்ல மறுத்ததால் இவர் நச்சுத்திராவகம் அருந்தியதாகவும் கூறப்பட்டது.

மரண விசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் மரண விசாரணை நடத்திஞர்.

(கா. நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

'நல்ல வீட்டுக்குச் சமமான பள்ளிக்கூடம் இல்லை. நல்ல பண்புகள் உள்ள பெற்றோர்களுக்குச் சமமான ஆசிரியர்களும் இல்லை.

— மகாத்மா காந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் புரட்டாதி மாதம் 30-ந் திகதி (16 - 10 - 69)

## இந்து ஆலயபரிபாலனம்

இந்து ஆலய பரிபாலன மசோதாவை அரசாங்கம் கொண்டுவந்து செயல்படுத்துவதற்கு இந்துமாமன்றம் உடனடியாகச் செயலில் இறங்கவேண்டுமென்னும் தீர்மானத்தை இந்துமாமன்றச் செயற்குழு நிறைவேற்றியிருக்கிறது. இந்த மசோதாவை எப்பொழுதோ செயல்படுத்தியிருக்க வேண்டும். இப்பொழுதாவது இந்த விஷயத்தில் இந்து மாமன்றம் முயற்சி செய்ய முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது. இதற்கு சைவமக்களின் உதவியும் ஒத்துழைப்பும் கிடைக்குமென்று நிச்சயமாக நம்பலாம்.

தமிழ்நாட்டில் ஆதீனங்கள் பலஇருக்கின்றன. இவை தவிர அறநிலையச் சபையும் இருக்கிறது. இதர சமயங்களுக்கு மதபீடம் இருக்கிறது. அதன் கட்டுப்பாட்டின் கீழ் ஆலயங்கள் இயங்குகின்றன. இலங்கையில் இந்து ஆலயங்கள் பெரும்பாலும் தனிப்பட்டவர்களின் நிர்வாகத்திலும் கட்டுப்பாடுகளிலும்தான் நடைபெற்றன. இந்த ஆலயங்களில் சில சிராகவும் சிறப்பாகவும் நடைபெற்று வருவதென்பது உண்மையே: ஆனாலும் சமூகப் பிரச்னைகள் அதிகரிக்கவும் மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தவேண்டிய ஆலயங்கள் வேற்றுமையை வளர்க்கவும் காரணமாகஇருப்பது பெரும்பாலும் இந்து ஆலயங்கள் தனிப்பட்டவரின் நிர்வாகத்திலும் கட்டுப்பாட்டிலுமிருப்பதும் அவை தனியார் சொத்தாக இருப்பதும்தான் என்பது பொதுவான அபிப்பிராயமாகும்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில்வீதிக்குப் பத்து கோயில்கள் காட்சியளிக்கும் ஓர் இடமாக விளங்குகிறது. வீதி ஓரத்திலுள்ள ஒரு பெரிய மரத்தை வெட்டப்போகிறார்களென்று அறிந்ததும் அந்த மரத்தினடியில் திடீரென்று ஒரு கோவில் இரவோடு இரவாக உருவாகிவிடும். இதுபோன்ற செயல்கள் இந்துசமயத்திற்கு இழுக்குத் தேடுவதாகாதா?

ஆலயங்களும் அவற்றில் திருவிழாக்கள் நடைபெறுவதும் சமூகத்தில் ஒற்றுமையை நிலைநாட்டவே ஏற்பட்டவை. காலப்போக்கில் இந்நோக்கத்தைக் கைவிட்டு ஆலயங்கள் வெறும் வியாபார ஸ்தலங்களாக மாறிவிட்டன. இந்த நிலை நீடிப்பது சைவசமயத்துக்கு மட்டுமல்ல சமூகத்துக்குமே நல்லதல்ல.

சமூகத்தின் ஒற்றுமையை நிலைநாட்டவும் மக்கள் அறவாழ்வு வாழவும் ஆலயங்கள் சமூகத்தின் சொத்தாக வேண்டும். இதற்கு இந்து ஆலய பரிபாலன மசோதாவைச் செயல்படுத்த வேண்டியது அவசியம். இந்துமாமன்றம் எடுக்கும் இந்த நல்ல முயற்சிவெற்றி இந்து சமூகத்துக்கும் கோயில்களுக்கும் நெருங்கிய தொடர்பும் ஒத்துழைப்பும் ஏற்பட்டு சமூகக் குறைகள் பலவும் கோயில்கள் மூலம் வழிபிறக்குமென்று நம்புவோம்.

## தோட்டக் குழந்தைகளின் கல்வி

தோட்டக் குழந்தைகளின் கல்விப் பிரச்னை குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தூதுக்குழுவொன்று கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லையைப் பேட்டி கண்டு விளக்கிக்கூறியிருக்கிறது. கல்வி அமைச்சர் இத்தூதுக்குழுவின் கோரி[illegible] முன்னேற்றத்தில் அக்கறை காட்டும் கல்வி அமைச்சும் வேறு ஸ்தாபனங்களும் தோட்டக் குழந்தைகளின் கல்வி விஷயத்தில் தீண்டாமையை அனுஷ்டிப்பது நியாயமாகுமா?

## தீவுப்பகுதி

கல்விச் சேவையில்

# ஒற்றுமைப்பாடு அத்தியாவசியமாகும்; இடமாற்றசபை உடன் நிறுவ வேண்டும்

(ஆசிரிய சேவைக்குறைகளை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தபோது வடமாகாண ஆசிரியசங்கம் கொடுத்த சாட்சியம் இங்கு தரப்படுகின்றது)

மாணவ ஆசிரியர்களின் நியமனத்தை எமது சங்கம் முற்றாக நிராகரிக்கிறது. ஆசிரிய சேவைக்கு மாசு கற்பிக்கும் தொகுதிவாரியான தெரிவு, சேவைத் தரத்தைக் குறைத்து இழிவுபடுத்தும் மலிவானசேவை பயிற்சியற்ற சேவையால் மாணவர்களுக்கு ஏற்படும் அனர்த்தம், என்பன மாணவ ஆசிரிய நியமனங்களால் ஏற்படும் வேண்டாத விளைவுகளான படியால் இந்நியமனத்தை தவிர்க்க வேண்டுமென வற்புறுத்துகிறது.

பாடசாலைகளுக்கு நியமனத்திற்கு பயிற்றப்பட்டோரும் பயிற்றப்பட்ட பட்டதாரிகளுமே அருகதையுடையவர்கள் என்பது எமது சங்கத்தின் சிபாரிசு. கல்விப் பொதுத்தராதரப் பரீட்சையில் (உயர்தரம்) குறைந்தது இரண்டுபாடங்களிற் சித்தியடைந்தோரைப் பயிற்சிக் கழகத்திற்கு தெரியப்படும் திட்டம் மிகவும் உசிதமானது என எமது சங்கம் கருதும். வளரும் மாணவர் தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப ஆசிரிய நியமனம் நிகழா திருத்தல்விசனிக்கத் தக்கது ஆசிரியர்கள் எத்தனை மாணவருக்கு ஒருவராக நியமிக்கப்படவேண்டுமென்ற ஐக்கிய நாட்டு கல்விகலாச்சார ஸ்தாபனத்தின் சிபார்சுகளை உடனடியாக நடைமுறையிற் கொணர்வது பயனளிக்கும் முறையாகும். லீவுகளிற் செல்லும் ஆசிரியரின் கடமைகளை ஆற்றுவதற்கு பதில் உதவி ஆசிரியர் நியமித்தல் அவசியமாகும்.

பதவி உயர்வு சம்பந்தமாக சங்கத்தின் கருத்துக்களைக் கூறுமிடத்து, தற்போது ஆசிரியருக்கு எத்தனை உயர்வுகள் எந்த எந்தக் கால கட்டங்களில் உண்டு என்பதை அரசாங்கம் என்றுவது அறியத் தரவில்லை. ஆசிரியர் அறியக்கூடிய வகையில், முதலாம் இரண்டாம், மூன்றுந்தர விசேட பதவிகள் உதவி அதிபர், அதிபர் பதவிகளும் இருக்கின்றன. இவற்றைத்தானும் அரசாங்கம் என்னென்ன ஒழுங்கு முறைகளில் வழங்குகின்றது என்பதை அரசாங்கம் வெளிப்படுத்துவதில்லை. இவ்வுயர்வுகள் வழங்கப்படு

கல்விச் சேவையில் ஒருமைப்பாடமைவது அத்தியாவசியமாகும். இதன் பிரகாரம் ஆசிரிய சேவையில் இருந்தே பதவியுயர்வு பெற்று கல்வியதிகாரிகளாகவோ, மகாவித்தியாதிபதியாகவோ வித்தியாதிபதிகளாகவோ ஆவதற்கேற்ற திட்டம் வகுக்கவேண்டும். இச் சேவையின் பிரகாரம் கல்வி அதிகாரியாகவும், வித்தியாதிபதிகளாகவும் இருப்பவர்கள் குறிக்கப்பட்ட கால எல்லைகளுக்கு ஆசிரிய சேவைக்கு மாற்றம் பெற்றுதிரும்பித் தமது முன்னைய பதவிகளுக்குச் சென்று கடமையாற்றவும், ஆசிரியர், அதிபர்கள் குறிக்கப்பட்ட கால எல்லைகளுக்கு கல்வி அதிகாரி, வித்தியாதிபதி என்பவரின் சேவைகளுக்கு மாற்றம் பெற்றுக் கடமையாற்றவும் திட்டம் வகுத்தல் ஒருமைப்பாட்டுச் சேவைக்குஉறுதியளிக்கும்.

### தொழிற் பாதுகாப்புத் தன்மை

ஆசிரியர்களுடன் சம்பந்தமான சகல கருமங்களையும் பொறுப்புடனும் கருத்துடனும் கவனிக்க, ஒரு கல்விச்சேவை ஆணைக்குழு அமைத்தல் அத்தியாவசியமாகும். தொழிற்சங்க ரீதியான நடவடிக்கைகளால் ஆசிரியர் பல சந்தர்ப்பங்களில், சட்டபூர்வமாகவும், மனிதாபிமான உரிமைக்கமையவும் காப்பாற்றப் பட்டுள்ளனர். எனினும் சமீபத்தில் ஆசிரியர் சிலர் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டதையும், வேலை நீக்கம் செய்யப்பட்டதையும் கூர்ந்து நோக்கின் ஆசிரியர்கள் எந்தநேரத்திலும் சடுதியாகக் கொடிய ஆபத்துக்களில் தள்ளப்படலாம் என்பது புலனாகிறது. ஆசிரியசேவைக்குத் தற்பாதுகாப்பு அளிக்கக் கூடியவை, ஒரு கல்விச் சேவை ஆணைக்குழுவும், அரசாங்கத்தால் அங்கீகாரம் பெற்று பூரண உரிமையுடன் செயற்படும் ஆசிரிய சங்கங்கள் திருப்திகரமானவையன்று. இது சம்பந்தமாக ஆசிரிய தொழிற்சங்கங்களைக் கலந்தாலோசிப்பதும் விசேஷசமாக கல்விச்சேவை ஆணைக்குழுவிடம் பொறுப்பு விடுவதும் பொருத்தமானவையாகும். ஆசிரியன் ஒழுக்கத்தொகுப்பு ஆசிரியசங்கத்துடன் கலந்து தொகுத்தல் வேண்டும்.

ஓர் ஆசிரியர் ஒழுக்கவீனமாக நடந்தாரென நிரூபிக்கப்பட்டால், அதற்குரிய தண்டனை எவையென அவருக்கு அறிவித்தல் அவசியம். ஆசிரியரின் ஒழுக்கவீனம்சம்பந்தமான விசாரணைகள் பகிரங்கமாக இடுத்தல் ஆகாது. வழக்கை நடத்தும் அதிகாரியும், விசாரணை செய்து நீதிவழங்க முன்வரும் அதிகாரியும் ஒருவராய் இருத்தல் பொருந்தாது. விசாரணைசெய்யும் அதிகாரிகளோ, அல்லது சபையோ அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டிருத்தல்வேண்டும். விசாரணை நடாத்துதற்குரிய விதிகளும் ஒழுங்கு முறைகளும் ஒரே தரமுடையதாகவும் முரண்பாடற்றதாகவும் இருத்தல் வேண்டும். ஒழுக்கவீனத்துக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்போது ஆசிரியருக்குப் பின்வரும் உரிமைகள் வழங்கப்படவேண்டும்.

அ. குற்றஞ்சாட்டப் படுபவருக்குகுற்றப்பத்திரிகைப் பிரதி வழங்குவது.

ஆ. குற்றஞ்சாட்டப் படுபவர் தான் நிரபராதி என நிரூபிப்பதற்கு வேண்டிய கால அவகாசம் கொடுப்பது.

இ. குற்றஞ் சாட்டப்படுபவரின் நலனைப் பாதுகாக்க விசாரணையின்போது குற்றஞ்சாட்டப்படுபவரின் சார்பாக ஒருவர் தோற்றுவதற்கும் வாதாடுவதற்கும் வசதியளிப்பது.

ஈ. விசாரணையின் தீர்ப்பும், அத்தீர்ப்புக்குரிய காரணமும், விளக்க வரலாறும் அடங்கிய பிரதியொன்று குற்றஞ் சாட்டப்பட்டவருக்குக் கொடுத்தல்.

சேவை புரிவதற்கு சகல சிவில் உரிமைகளும் வழங்குதல் அவசியமாகும். அரசியல் உரிமை ஆசிரியருக்கு வேண்டியதொன்று. இலங்கையில் நியாயவாதிகள் சுயதொழில் உரிமையாளர் என்பவரால், இலங்கை அரசியல் சுவீகரிக்கப்பட்டு, அவர்களின் ஏகபோக உரிமையாக இருந்துவருகிறது. அரசியலை ஒரு அங்கீகரிக்கப்பட்டபாடமாகவும்கொண்டு போதித்துவரும் ஆசிரிய சமுதாயத்திற்கு அரசியல் உரிமைமறுத்தல் விந்தையாகும். ஆசிரியர் தேர்தலில் நியமனம்பெற்றுப் போட்டியிடுவதற்கு நியாயமான லீவு வழங்கவேண்டும். தேர்தலில் வெற்றிகண்டு, எவ்வாட்சி மன்றங்களிலேனும் அங்கத்துவம்வகித்து, திரும்பிப் படிப்பித்த சேவைக்கு ஆசிரியர் செல்லும்போது, அவருடைய சேவை, இளைப்பாற்று வேதனம் என்பன பாதிக்கப்படாத நிலையில் அவர்கள் சேவையிற் சேர்க்கப்படல்வேண்டும்.

### படிப்பதற்குரிய வசதிகள்

அளவான வகுப்பறைகள், தளபாடங்கள், கணிசமான நூல்களைக்கொண்ட நூல் நிலையம், பூரணமான ஆய்வு கூடம், ஏனைய அரசாங்க ஊழியருக்கு கட்டிக்கொடுக்கப்படுவது போன்ற வீடுகள் அளவான வேலைநேரம் அளவைமிஞ்சாத வேலைப்பழு, என்பன போன்ற வசதிகள்வாய்ந்த சூழ்நிலை சிறந்த முறையில் படிப்பித்தல்நிகழ்வதற்கு சிறந்த ஊக்கியாக அமையும்.

### வேலையும் நேரமும்

அதிர்ஷ்டலாபச் சீட்டு விற்பனை போன்ற சூதாட்ட முயற்சிகள் ஆசிரியரின் புனித சேவைக்கு பங்கம் விளைக்கும். பின்பற்ற வேண்டிய சிறந்த லக்ஷணங்களையுடையவராயிருக்க வேண்டிய ஆசிரியரை சூதாட்ட முயற்சியிலும் சூதாட்டத்தைப் பரப்பும் முயற்சியிலும் ஈடுபடச் செய்வதால் அச்செயல் அவரின் தொழிலையும் குணநலன்களையும், மாணவரின் சீலத்தையும் சீரழிக்கும். இந்தச் செயலில் ஈடுபடுமாறு நெருக்கும் அதிகாரிகளுக்கெதிராக

# ஐயாறன் எழுதுவது

யாழ்ப்பாணத்திலே சென்ற இரண்டு நாட்களாக சூரியோதயமே ஆகவில்லை. அடை மழை பெய்கிறது. இது நல்ல மழை. வான் முகில் வழாது பெய்க, மலி வளம் சுரக்க!

இருக்குமிடமெல்லாம் ஈரம். படுக்குமிடத்திலும் கூட மழை சொட்டு சொட்டென்று சொட்டுகிறது. என்றாலும் பல வீடுகளிலும் இந்த மழையால் பல மக்கள் இதைவிடச் சங்கடப்படுவதை நினைத்துக்கொண்டால் நமக்கு நமது கஷ்டம் பெரிதாகத் தெரியாதல்லவா! தற்காலிகமாக சில வசதியீனங்கள் நமக்கு ஏற்படினும் மேலும் தொடர்ந்து மழை பெய்து ஊரும் நாடும் செழிக்கப் பிரார்த்திப்போம்.

0 0 0

இந்த மழையால் 'உடன் சில நல்ல பயன்கள் ஏற்பட்டுள்ளன. பயிர் பச்சைகளுக்கு இது நல்லதென்பது ஒருபுறமிருக்க, கொசுத் தொல்லையே இல்லை. இல்லாவிட்டால் இரவில் மட்டுமன்றி பகலிலும் கொசுக்கள் படை படையாக வந்து நம்மை எவ்வளவு உபத்திரவம் செய்யும்.

மழை நின்றதும் ஒன்றுக்கு இரண்டாக கொசுத் தொல்லை அதிகரிக்குமென்று எச்சரிக்கை செய்கிறார் பக்கத்திலுள்ள என் நண்பர். என்றாலும் இப்போதைக்கு அந்தத் தொல்லை இல்லாலாதது பெரிய விஷயம்.

நமது மாநகரசபையினர் கொசுத் தொல்லையை ஒழிப்பதில் தீவிர கவனம் செலுத்தினால் நோய்கள் குறையவும் நாம் சுகாதாரத்துடன் வாழவும் முடியும்.

0 0 0

மழைவிட்டும் தூவானம் விடவில்லை என்பதுபோல் இந்தியாவிலே காங்கிரஸ் அரசியலில் நெருக்கடி தீரவில்லை. காங்கிரஸில் 'கட்டுப்பாடு வேண்டும்' என்ற கூக்குரல் பொதுமேடைகளிலும் கேட்கின்றது.

காங்கிரஸ் பார்லிமெண்ட் போர்டு பெரும்பான்மை வாக்கினால் செய்த தீர்மானத்தை பிரதமர் இந்திரா மீறியதாகச் சாட்டப்பட்ட குற்றச்சாட்டு, பின்னர் சமாதானமாக முடிந்ததாக நினைத்திருந்தோம். ஆனால் இந்தப் பிரச்னைகள் மீண்டும் தலைதூக்கி 'ஸிண்டிகேட்'டுக்கும் பிரதமர் இந்திரா கோஷ்டிக்கும் தகராறு நீடித்து, மீண்டும்சந்தி சிரிக்குமளவுக்கு வளர்ந்துள்ள அதைத் தீர்த்து வைக்கக்கூடிய பொது நோக்கமும் ஆத்மீக சக்தியுமுள்ள ஒரு தலைவர்கூட இன்று இந்தியாவில் இல்லையே என்று ஒரு பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது.

'ஹரே ராம்' என்று கடைசிமூச்சுவரை சொல்லிச் சொல்லி மகாத்மா காந்தி நாட்டுக்கு அரசியல் விடுதலை வாங்கித் தந்தார். கூட்டுப் பிரார்த்தனைகளை நடத்தினார். ஆனால் இன்றுள்ள காங்கிரஸ் தலைவர்களில் யாருக்கும். அந்த தெய்வ நம்பிக்கையோ, பக்தியோ உண்டா? குற்றம் பார்த்தால் சுற்றமில்லை என்பார்கள். தெய்வ பக்தியின் மூலமேமக்கள் ஒற்றுமையை வளர்த்தார் மகாத்மா. அவரது நூற்றாண்டு விழாவை நடத்தி அவரைப் பின்பற்றுவதாகக்கூறுபவர்அவர்காட்டிய தெய்வபக்தியைக் கைக்கொண்டால், இன்று காங்கிரஸில் ஏற்பட்டுள்ள வேற்றுமை எல்லாம் மறைந்துவிடும். பிறர் குற்றத்தை காணுமுன் நம் குற்றத்தை நாம் காண்போம். அப்படிச் செய்தால் எல்லாத் தகராறுகளும் தீர்ந்துவிடாவா?

0 0 0

பொருத்திய குரம்பை தன்னுள் பொய்நடை செலுத்துகின்றீர், ஒருத்தனை உணரமாட்டீர் உள்ளத்தில் கொடுமை நீக்கீர், வருத்தின களிறு தன்னை வருத்துமா வடுத்தவல்லார், கருத்தினில் இருப்பர் போலும் கடவூர் வீரட்டனாரே.

— அப்பர் அடிகள்

## ஆலயப் பிரவேசம் குழு நியமனம்

பம்பலப்பிட்டி, புதன்

ஆலயப்பிரவேசத்துக்கு இந்து சமூகசாதி வேற்றுமையால்வரும்கஷ்ட நஷ்டங்களை ஆராய்ந்து பரிகாரம்காணும் வழிவகைகளைத் தெரிவிக்க குழு ஒன்றுக்தரிவு செய்யப்பட்டுள்ளது.

திரு. எஸ் பி. ஸ்ரீ ஸ்கந்தராசா, திரு. கி. லக்ஷ்மண ஐயர், திரு. வி. மாணிக்கவாசகர், திரு. வி. கே. கந்தசாமி' திரு. ஆ. சின்னத்தம்பி ஆகியோர் இக்குழுவின் அங்கத்தவர்கள். இரண்டு மாதகாலத்துள்ள அறிக்கை ஒன்றைக்குழுசமர்ப்பிக்க வேண்டுமென மன்றச்செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதுபற்றிய கருத்துக்களை தெரிவிகக விரும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தூதுக்குழுவொன்று கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லையைப் பேட்டி கண்டு விளக்கிக்கூறியிருக்கிறது. கல்வி அமைச்சர் இத்தூதுக்குழுவின் கோரிக்கைகள் சம்பந்தமாக என்ன பதில் சொன்னார், என்னென்ன வாக்குறுதிகள் அளித்தார் என்பது தெரியவில்லை.

தோட்டப்பகுதிப் பாடசாலைகளின் நிலையும் தோட்டக் குழந்தைகளின் கல்விப் பிரச்னையும் ஒரு தூதுக்குழு சொல்லித்தான் கல்வி அமைச்சரோ அரசாங்கமோ தெரிந்துகொள்ளவேண்டிய விஷயமில்லை. இலங்கை-இந்தியர் பிரச்னை எப்படிப் புரையோடிப்போன பிரச்னையாக இருந்ததோ அதே போன்றுதான் தோட்டக் குழந்தைகளின் கல்விப் பிரச்னையுமாகும். இந்திய வம்சாவழியினரின் பிரச்னைக்கு ஒரு முடிவு காணவேண்டுமென்று துடியாய்த் துடித்தவர்கள், துடிப்பவர்கள் கூட தோட்டக்குழந்தைகளும் குழந்தைகள்தான், அவர்களும் மனிதர்களாக நற்பிரஜைகளாக வளரவேண்டுமென்று எண்ணமலிருப்பதுதான் விந்தை.

நல்ல முறையில் சீரான நிர்வாகத்தின் கீழ் சிறந்த கல்வி நிலையங்களாக நடந்துவந்த பாடசாலைகளையெல்லாம் அரசுடைமையாக்கிய அரசாங்கமும், அவற்றை மீண்டும் தங்களிடம் ஒப்படைக்கக் கோரும் நிறுவனங்களிடம் ஒப்படைக்க மறுத்து கல்வியையே குளறுபடியாக்கிவரும் இன்றைய ஆட்சியாளரும் கூட சீர்கெட்ட தோட்டப் பாடசாலைகளை எடுத்து சீராக்கித் தோட்டக்குழந்தைகளுக்குச் சீரான கல்வி அளிக்கச் சிந்திக்கவில்லை. சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ் நாட்டைவிட்டுப்போகிற குழந்தைகள் போகட்டும்; இங்கு இருக்கப்போகிற குழந்தைகள் நல்ல கல்வி பெற்று நற்பிரஜைகளாக வருவதற்கு இந்த நாட்டு அரசாங்கம் தானே பொறுப்பேற்க வேண்டும்.

வடபகுதியிலுள்ள ஹரிஜனப் பிள்ளைகளின் கல்வி அமைச்சும் வேறு ஸ்தாபனங்களும் தோட்டக் குழந்தைகளின் கல்வி விஷயத்தில் தீண்டாமையை அனுஷ்டிப்பது நியாயமாகுமா?

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## தீவுப்பகுதி பஸ் பிரயாணிகள் கோரிக்கை

வேலணை, புதன்

தீவுப்பகுதி பஸ் பிரயாணிகள் சங்கத் தலைவர் திரு. பி ஜே அலோசியசும், செயலாளர் திரு. மு. குமாரசாமியும் இ. போ. ச. பிரதம பொறியியலாளரைப் பேட்டி கண்டு ஊர்காவற்றுறைக்குக் கூடிய பஸ்களை சேவையிலீடு படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படியும், இப்பகுதிக்கு புது பஸ்களை ஓடவிடும்படியும் முக்கியமான சில வீதிகளில் பஸ் சேவையை ஆரம்பிக்கும்படியும் வேண்டிக்கொண்டனர்.

......

## பண்ணிசைக் கச்சேரி

யாழ்ப்பாணம், வியாழன்

நாளை மாலை 4 மணி முதல் சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானத்தில் ஸ்ரீ சக்கர யந்திரபூஜை, கொலுபூஜை முதலியன நடைபெறும்.

இரவு 8 மணி முதல் மெய்கண்டார் ஆதீனவித்வான் பண்ணிசைச்செல்வர் தேவார இசைமணி திரு வி ஏ எஸ் இராஜசேகரன் பக்கவாத்திய சகிதம் திருமுறைப் பண்ணிசைக்கச்சேரி நடத்துவார்.

## ஓவியங்களுக்கு ஆபத்து

கோட்டை, புதன்

உலகப்புகழ் பெற்ற சிகிரியா ஓவியங்களுக்கு மறுபடியும் ஆபத்து ஏற்படலாம் எனக்கருதப்படுகிறது.

இந்த ஓவியங்களை ஒரு சாதி பூச்சிகள் தாக்குவதாகவும் இதற்கு உடனடியாக பாதுகாப்பு நடவடிக்கை எடுக்காவிடில் குறுகியகாலப் பகுதியில் இவ்வோவியங்கள் அழிந்து போகலாம் எனக் கருதப்படுகிறது.

## லண்டன் சென்றார்

பண்டத்தரிப்பு, புதன்

இளவாலையைச் சேர்ந்த திரு. எட்வேட் ரத்தினசிங்கம் (22) துணி உற்பத்தியில் பயிற்சி பெறுவதற்கு லண்டன் சென்றுள்ளார். இங்கிலாந்தில் உள்ள போல்ரன் இன்ஸ்ரிரியூட்டில் இவர் பயிற்சி பெறுவார். இவர் இளவாலை அர்ச். என்றியரசர் கல்லூரியின் பழைய மாணவராவார்.

விசேட பதவிகள் உதவி அதிபர், அதிபர் பதவிகளும் இருக்கின்றன. இவற்றைத்தானும் அரசாங்கம் என்னென்ன ஒழுங்கு முறைகளில் வழங்குகின்றது என்பதை அரசாங்கம் வெளிப்படுத்துவதில்லை. இவ்வுயர்வுகள் வழங்கப்படுவோர் எவ்வாறு அரசாங்கத்தால் தெரியப்படுகிறார்கள் என்பது மர்மமாகவே இருக்கிறது. எனினும் இது விடயமாக சேவை மூப்பு புறக்கணிக்க பலதடவைகளில் புறக்கணிக்கப்பட்டிருப்பதை நாம் அறியக் கூடியதாக இருக்கின்றமையின், சேவை மூப்பு புறக்கணிக்கப்படுகிறதென்பதை நிரூபிக்க முடியும். பிறர் தயவில் பதவி உயர்வுகள் வழங்கப் பட்டமையும் இரகசியம் அல்ல.

கொடிய ஆபத்துக்களில் தள்ளப்படலாம் என்பது புலனாகிறது. ஆசிரியசேவைக்குத் தற்பாதுகாப்பு அளிக்கக் கூடியவை, ஒரு கல்விச் சேவை ஆணைக்குழுவும், அரசாங்கத்தால் அங்கீகாரம் பெற்று பூரண உரிமையுடன் செயற்படும் ஆசிரிய தொழிற் சங்கமேயாகும். அதிகாரிகளின் யதேச்சாதிகார நிர்வாகத்திலிருந்தும், ஆசிரியர்களை அரசியற் பகடைக்காய்களாக ஆக்கி இயங்கும் அரசியலிலிருந்தும் பாதுகாப்பதற்கு இரண்டு ஸ்தாபனங்களும் ஆசிரியருக்கு ஒரு வரப்பிரசாதம் போன்றவையாகும்.

### ஒழுக்கமும் தொழிற்தன்மையும்

ஆசிரியர்களின் ஒழுக்க சம்பந்தமாக இப் பொழுது எடுக்கப்படும் நடவடிக்கை

# நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், வியாழன்

திருநெல்வேலி சைவ முன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் பரமேஸ்வராக் கல்லூரிச் சந்தி விநாயகர் ஆலய முன்றலில் நடைபெற்று வரும் நவராத்திரி விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள் யாழ் நகர துணை முதல்வர் திரு. ஆ. துரைராஜசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இன்றைய நிகழ்ச்சிகள் விபரம்:

சைவ முன்னேற்றக்கழக மாணவர்களின் கீதம்: திவ்ய ஜீவன சங்கத்தாரின் பண்ணிசை. சிறப்புச் சொற்பொழிவு திருவாளர்கள் அ. கந்தசாமி சி. திருச்செல்வம்.

செல்வி பத்மாவதி சுப்பிரமணியம், சங்கீத பூஷணம் ஆகியோரின் இன்னிசையும் நடைபெறும்.

0 0 0

உடுவில் கிராமசபை திறந்த வெளியரங்கில் நடைபெறும் நவராத்திரி விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள்:

அளவை வி. பாலகிருஷ்ணன் குழுவினரின் மங்கள இசை, சமூக சேவைப் பகுதி அதிபர் திரு. என். சிவசிதம்பரத்தின் தலைமையுரை, செல்வி ஞானகுமாரி தங்கராசா, திரு. பி. முத்துக்குமாரசாமி சர்மா ஆகியோரின் இன்னிசை.

0 0 0

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நவராத்திரி விழாவை முன்னிட்டு இன்று மாலை கல்லூரி இல்லங்களின் நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

0 0 0

கொழும்பு விவேகானந்த சபையில் நவராத்திரி விழாவை முன்னிட்டு ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகளால் தினசரி இரவு 'இராமாயணம்' கதாப் பிரசங்கம் நடைபெறுகின்றது.

0 0 0

அல்வாய் வடக்கு அதிவீரபத்திரக் கோவிலில் தினமும் நவராத்திரி விழா நடைபெறுகின்றது.

0 0 0

சுழிபுரம் செவ்வாய்

பண்ணாகம்தெற்கு ஸ்ரீ முருகன் வாசிகசாலை மண்டபத்தில் நவராத்திரி விழாவெகு விமரிசையாக தினமும் நடைபெற்று வருகின்றது தினமும், கூட்டுப்பிரார்த்தனை சொற்பொழிவு ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

0 0 0

மாதகல் மேற்கு வாசிகசாலை பண்டபத்தில் நவராத்திரி பூசை நடைபெற்று வருகின்றது. கூட்டுப்பிராத்தனை பூசை, ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறுகிறன.

0 0 0

வழக்கம்பரை அம்மன் கோவில் விசேட பூசைகள் ஒவ்வொருவர் உபயமாக நடைபெறுகின்றது. மாலைப் பூசையின் போது பலர் கலந்து கொள்கின்றனர்.

0 8 0

மல்லாகம், புதன்

மாங்குளம் காணி அபிவிருத்திப் பகுதி இந்துமன்றத்தினர் தமது அலுவலக முன்றலில் இம்மாதம் 19ம் திகதி சரஸ்வதி பூசை விழாவை நடைத்த விருக்கின்றனர். ரசிகமணி கனகசெந்திநாதன், திரு. சி. கனகநாயகம் ஆகியோரின்சொற்பொழிவு இன்னிசை, வில் லிசை போன்ற நிகழ்ச்சிகள் விழாவில் இடம் பெறும்

பாக ஒருவர் தோற்றுவதற்கும் வாதாடுவதற்கும் வசதியளிப்பது.

ஈ. விசாரணையின் தீர்ப்பும், அத்தீர்ப்புக்குரிய காரணமும், விளக்க வரலாறும் அடங்கிய பிரதியொன்று குற்றஞ் சாட்டப்பட்டவருக்குக் கொடுத்தல்.

உ. விசாரணையில்திருப்தி காணப்படாவிடின் மேல் மனுச்செய்ய வசதிசெய்தலும் ஒழுங்கு செய்தலும்.

### தொழிலும் கல்விச் சுதந்திரமும்

படிப்பித்தல் சம்பந்தமாகச் சகல பாடசாலைகளிலும் ஒரு பொதுவான பாடத்திட்டம் இருத்தல் அவசியம். போதனா முறைகளைக் கையாள ஆசிரியருக்கு சுதந்திரம் இருக்கவேண்டும். பொதுவான பாடத்திட்டங்களைப் பரிசீலனை செய்யக் காலத்துக்குக் காலம் கருத்தரங்குகள் வைத்தல்வேண்டும். படிப்பித்தற் சேவைக்குத்தேவையான சகலமுறைகளையும் ஒழுங்குகளையும் அறிந்துகொள்வதற்கும் பயனளிக்கும்வகையில் கையாள்வதற்கும், ஆசிரியருக்கு விசேட கல்வித்தூரத் தன்மையிருப்பதால் அநாவசிய தலையீடுகள் தவிர்த்தல் நன்று. படிப்பித்தலோடு சம்பந்தப்பட்ட வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்வதற்கு ஆசிரிய சங்கங்களின் ஆலோசனை தவிர்க்க முடியாததொன்றாகும். ஓர் ஆசிரியருடைய வேலை நியாயமற்றமுறையில் அளந்து கணிக்கப்பட்டால் மேல் மனுச்செய்ய ஆசிரியருக்கு உரிமைவேண்டும்.

### ஆசிரியரின் பொறுப்பு

ஆசிரியர் ஒருவர் தனது தொழிலில் தனக்கு ஒரு தகைமைத்தரம் உண்டென்று ஏற்றுக்கொண்டதால், தொழில் சம்பந்தமாக உயர்தர பணிகளை அவ்வாசிரியர் ஆற்றவேண்டியவராவார். மாணவருக்கு சகல இயல்புகளிலும் ஆசிரியர் முன்மாதிரியாகவும், மாணவர் பின்பற்றக்கூடிய உத்தமலக்கண புருஷத்துவமுடையவராகவும் இருக்கக்கடவர். மாணவரினதும் பெற்றோரினதும் நலன் சம்பந்தமாக வெளிவேலைகளில் ஆசிரியர் கலந்துரைத்தல் வேண்டற்பாலது. பாடசாலை நிர்வாகம், கல்விச் சேவையின் வளர்ச்சி ஆகிய துறைகளில் அதிபர்கள், ஆசிரியர்களின் ஒத்துழைப்பைப் பெறுவது மிகவும் அத்தியாவசியமென்ப, ஆசிரியர்களும் அவர் தம் சங்கங்களும் இம் முன்னேற்றங்கள் சம்பந்தமாகக் கலந்துகொள்ளல் முக்கியமாகும்.

### ஆசிரியரின் உரிமை

ஓர் ஆசிரியர் சுதந்திரத்துடனும் திறமையுடனும்

ட்ட முயற்சியிலும் சூதாட்டத்தைப் பரப்பும் முயற்சியிலும் ஈடுபடச் செய்வதால் அச்செயல் அவரின் தொழிலையும் குணநலன்களையும், மாணவரின் சீலத்தையும் சீரழிக்கும். இந்தச் செயலில் ஈடுபடுமாறு நெருக்கும் அதிகாரிகளுக்கெதிராக ஆசிரிய தொழிற் சங்கம் உகந்த நடவடிக்கை எடுத்தல் அவசியம். ஆசிரியத் தொழிற்பயிற்சி சம்பந்தமான படிப்புகளுக்கு மட்டும், இப்பொழுது முழுச் சம்பளத்துடன் படிப்பு விடுமுறை உண்டு இது போன்று மேற்படிப்பு சம்பந்தமானவற்றிற்கும் முழுச் சம்பளத்துடன் படிப்பு விடுமுறை கொடுக்கவேண்டும்

### இடமாற்றம்

இடமாற்றச்சபை உடனடியாக ஸ்தாபித்தல் வேண்டற்பாலது. துரதிர்ஷ்டவசமாக அது நீக்கப்பட்டது கண்டிக்கப்படக் கூடிய தொன்றாகும். சுருங்கக் கூறின், தற்போது நடைமுறையிலுள்ள மாற்றத் திட்டங்கள் யதேச்சதிகாரமானவை. சர்வாதிகாரத்தனம், அநீதியும் பொதிந்த மாற்றத் திட்டங்களை ஆசிரியத் தொழிற் சங்கம் தனித்தும், தேவை காணப்படின் இதர தொழிற் சங்கங்களுடன் இணைந்தும்நேரடி நடவடிக்கை மூலம் தீர்வு காண வேண்டும்.

### ஆசிரியரின் சம்பளம்

சிறிய வேதனமாக இருந்த போதும் கடைசியாக தஞ்சங் கொடுக்குந்தொழில் ஆசிரியத் தொழில் என்ற மாசு துடைக்கப்பட வேண்டும். ஆசிரியர் தொழிலைக் கண்ணியமுடைய தொழிலாகக் கருதுவதற்கு விஷேச திறமைகளை அம்சமாகக் கொண்ட தராதரப் பத்திரமுடையோரைக் கவரக் கூடிய உயர்ந்த வேதனமளிக்க வேண்டும். அப்படித்தானுமில்லாவிடின் ஏனைய அரசாங்கத் திணைக்களங்களில் அத்தராதரமுடையோருக்கு அளிக்கப்படும் வேதனமாவதுகொடுபடவேண்டும். உயர்ந்த வேதனமே ஆசிரியத் தொழிலின் உயர்ச்சியைக் காட்டும் பிரதான அம்சமாகும்.

### பாதுகாப்புத் தன்மை

1952ல் சர்வதேச தொழிற் ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட சமுதாயப் பாதுகாப்பில் ஆசிரியருக்கு இம்மியளவேனும் அளிக்கப்படவில்லை. ஆசிரியர் தமது பாதுகாப்பு உரிமைகளைப் பெறவேண்டுமானால், முதற்படியாகக் தமது கற்பனை உயர்ச்சிப் பீடத்திலிருந்து விழித்தெழுந்து, தாமும் தொழிலாளரென உணரவேண்டும். உண்மையான உயர்ச்சியை அடைய தொழிற்சங்கச் சக்தியை ஆயுதமாகக் கொண்டு உரிமைகளைப் பெறப் போராடவேண்டும். இச்சுய முயற்சி உண்மையான உயர் அந்தஸ்தை நல்கும்.

ஆசிரியரின் விதவைகள், அநாதைகள் பெறும் அற்ப இளைப்பாற்று நிதி, வேறெந்த அரசாங்கவிதவைகளோ அநாதைகளோ பெறுவதில்லை. ஆசிரியருக்கும் அவர் தம் விதவைகளுக்கும் அநாதைகளுக்கும் ஏனைய அரசாங்க ஊழியருக்குரிய இளைப்பாற்று வேதனத் திட்டம் அமுலாக வேண்டுமென்றும் காலத்துக்குக் காலம் அஃதாவது குறைந்தது பத்து வருடத்துக்கொரு முறையாவது இளைப்பாற்று வேதனத்திட்டம் புதுக்கியமைக்க வேண்டுமென்றும் எமது சங்கம் கருதுகிறது.

குற்றச்சாட்டு, பின்னர் சமாதானமாக முடிந்ததாக நினைத்திருந்தோம். ஆனால் இந்தப் பிரச்னைகள் மீண்டும் தலைதூக்கி 'ஸிண்டிகேட்'டுக்கும் பிரதமர் இந்திரா கோஷ்டிக்கும் தகராறு நீடித்து, மீண்டும்சந்திசிரிக்குமளவுக்கு வளர்ந்துள்ளது.

காங்கிரசுக்குள்ளாக ஏதாவது வேற்றுமை ஏற்பட்டால், அக்கட்சிக்குள்ளாகவே அதைத் தீர்த்துக் கொள்வதுதான் முறை கட்சிக்கு வெளியே பொது மேடைகளில் பகிரங்கமாக அதைப்பற்றி யார் பேசினாலும், அது கட்சிக் கட்டுப்பாட்டுக்கும் மதிப்புக்கும் உகந்ததாகுமா? கட்சிக்கட்டுப்பாட்டைப்பற்றி வற்புறுத்துகிறவர்கள் கட்சி வேற்றுமைகளை சந்தி சிரிக்கும்படி செய்வது அவர்களே அக்கட்டுப்பாட்டை மீறுவதாகாதா?

0 0 0

காங்கிரசுக்குள் வேற்றுமை ஏற்படும்போது

## பொலிசார் எண்ணிக்கை அதிகரிப்பு

கோட்டை, புதன்

பொலிஸ் படையின் எண்ணிக்கை படிப்படியாகஉயர்ந்து 40 வருடகாலப் பகுதிக்குள் அதன் எண்ணிக்கை 20,000ஆகவேண்டும் எனப் பொலிஸ் திட்டக்கிளையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்பொருட்டு 10வருடத திட்டமொன்றும் தீட்டப்பட்டுள்ளது.

தற்பொழுது 12000 பொலிசாரேயுள்ளனர். நியமன விஷயத்திலும் இனிமேல் கோரப்படும் கல்வித் தரத்தை படிப்படியாக உயர்த்த வேண்டுமெனவும் அரசாங்கத்துக்கு மேற்படி கிளை சிபார்சு செய்துள்ளது.

திரு. ஆ. சின்னத்தம்பி ஆகியோர் இக்குழுவின் அங்கத்தவர்கள். இரண்டு மாதகாலத்துள்ள அறிக்கை ஒன்றைக்குழுசமர்ப்பிக்க வேண்டுமென மன்றச்செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதுபற்றிய கருத்துக்களை தெரிவிகக விரும்புவோர் திரு. எஸ். பி, ஸ்ரீ ஸ்கந்தராசா 108/1 பார்ண்ஸ் பிளேஸ், கொழும்பு-7 என்ற விலாசத்துக்குத் தெரிவிக்கும்படி மன்றம் கேட்டுக்கொண்டுள்ளது.

## மருந்துகள் நனைந்து நாசமாகின

கோட்டை, புதன்

சமீபத்தில் பெய்த கடும் மழை காரணமாகஅரசாங்க மருந்துச்சாலையில் லட்சம் ரூபாபெறுமதியுள்ள மருந்து வகைகள் நாசமாகியுள்ளன.

இம்மருந்துகளுக்குப் போதியளவு பாதுகாப்பு வசதிகள் இல்லாத காரணத்தினாலேயே பழுதாயின என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுவேலைப் பகுதிக்குப் பலதடவை அறிவித்திருந்தும் இந்த சிவில் மெடிக்கல் ஸ்ரோஸின் கூரையைத் திருத்தியமைக்க ஒருவித முயற்சியும் எடுக்கப்படவில்லையெனவும் இம்மருந்துகள் பழுதாகியமைக்கு பழுதான கூரையிலிருந்தும்சிந்திய நீரே காரணம் எனவும் சௌக்கிய இலாகா புகார் தெரிவித்துள்ளது.

## தமிழ்நாட்டில் கோவில்களுள்

### பிறமதத்தினரும் செல்லலாம்

சென்னை, அக் 15

தமிழ்நாட்டில் கோவில்களில் மூலஸ்தானம் வரையிலும் இந்துக்களல்லாத பிறமதத்தினரும் செல்ல அனுமதிக்கப் படுவார்கள் என்று தமிழக அரசு இந்து அறநெறிநிலைய ஆணையாளர் கே. எஸ். நரசிம்மன் தெரிவித்துள்ளார்.

பிறமதத்தினர் கோவிலுக்குள் செல்லக்கூடாதுஎன்று கோவிகளுக்குமுன்புபோடப்பட்டுள்ள அறிவிப்பு பலகைகள் நீக்கப்படுமென்றும் மூலஸ்தானம் வரை செல்லும் பிறமதத்தினர் மேலாடையை அகற்றவேண்டிவருமென்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## தி.மு.க. உதவி

சென்னை, அக். 15

சில தினங்களுக்கு முன் பெங்களூரில் நடைபெற்ற கருணாநிதி பேசிய கூட்டமொன்றில் நெரிசலில் காயமடைந்தவர்களுக்கு தி.மு. கழகம் பண உதவி செய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org